AstroVed

# சத்வித்யா

மாலை: 1 மலர்: 20

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை வெளிவரும்
ஜூன் 16முதல் 30வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## பழனி முருகன் சிலையின் சிறப்புகள்

- ★ சிவ ஜோதி தரிசனம்
- ★ சேஷாத்ரி சுவாமிகள்
- ★ வியப்பூட்டும் மகான்கள் !
- ★ மூலிகை ரகசியம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்

மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



இன்றைய உலகில் வறுமை நிலையோடு, அடுத்தவர் கட்டளைக்கு அடி பணிந்து கூலி வேலை செய்கின்றனர். நாள் முழுதும் உழைத்தாலும் அவர்கள் இறுதிவரை கூலி வேலை செய்தே வாழ வேண்டியுள்ளது.
அறிவுத் தெளிவே இல்லாத ஒருவன் பெரிய பதவியில் இருப்பான் சிறந்த அறிவோடு ஒருவன் தெருவில் திரிவான்.
யாருக்கும் ஒரு பைசா கூட கொடுக்க மனமில்லாத கஞ்சன் ஒருவன், யாரோ ஒருத்தியை அன்புக்குரியவளாய் எண்ணி, தன் சொத்தையே எழுதி வைக்கத் துணிவான்.
இதெல்லாம் எப்படி நடக்கிறது? இது தான் விதியா? இல்லை, இது தான் முற்பிறவிப் பயன்! இதை விதி என்று சொன்னாலும் தவறில்லை! பூர்வ ஜென்மத்தின் தொடர்ச்சி, வினைக்கேற்ப விளையாடுகிறது! இதை அறிந்தால் வாழ்க்கை நிலை மாறும்!

~ Dr. Baskaran Pillai

"சத்வித்யாவின்" வாசகர்களாகிய ஆன்மீக அன்பர்களே இறையருளால், நம்மை பயமுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனாவின் இரண்டாவது அலையின் தாக்கத்திலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டுக் கொண்டிருக்கிறோம். இக்கொடிய வைரஸ்க்கு ஏராளமானவர்களை பலி கொடுத்து, பலரும் சோகத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். இந்நிலையில் மூன்றாவது அலையின் தாக்கத்தை எதிர் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என சகலரும் அறிவுறுத்துகின்றனர். குறிப்பாக, மூன்றாவது அலை குழந்தைகளைத் தாக்கும் என ஒரு சாராரும் தாக்காது என பிறிதொரு சாராரும் சொல்ல...."எல்லாம் அவன் செயல்" என இறைவனை நம்பி, எச்சரிக்கை உணர்வோடு நோய் பரவா வண்ணம் நம்மை நாமே பாதுகாத்திடுவோம்.




ஆபத்தை தவிர்க்க, ஆன்மிகம் சொல்லும் அறிவுரைகளை ஏற்போம். யாகங்களால் வைரஸை விரட்டுவோம். தனி மனித ஒழுக்கம் காப்போம் தர்ம சிந்தனை கொள்வோம். நேர்மைத் திறம் அறிவோம். வஞ்சமில்லா நெஞ்சம் கொள்வோம்.
தூய உள்ளத்தில் இறைவனை இருத்தி, தொல்லைகளற்ற வாழ்க்கையை அடைவோம்.

(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# பழனி முருகன் சிலையின் சிறப்புகள்

பழனி மலையில் அருள் புரிந்து வருகின்ற முருகனின் சிலை நவபாஷாணங்களால் உருவாக்கப்பட்டது என்பது அனைவருக்கும் தெரியும். இந்த சிலையை வடிவமைத்தவர் போகர் என்ற சித்தராவார். போகர், இந்த சிலையை உருவாக்க தன்னுடன் 81 சீடர்களை துணைக்கு வைத்திருந்ததாக அறியப்படுகிறது.

400 க்கும் மேற்பட்ட மூலிகைகளைக் கொண்டு வந்து இந்த சிலையினை உருவாக்கி இருக்கிறார், போகர்!மொத்தம் 9 ஆண்டுகள் கடுமையான உழைப்பிற்குப் பிறகே சிலை உருவானதாம்.



அந்த 9 ஆண்டுகளும் இயற்கையின் சீற்றங்கள் எதுவும் இடையூறு ஏற்படுத்தாமல் தணிந்து கொடுத்ததாம். காரணம், இது தனிப்பட்ட போகரின் வழிபாட்டுக்கோ, இறை இன்பம் காண்பதற்கோ உருவாக்கப்பட்டதால்! இறைவன் அருளால், இந்த சிலையால் உலக மாந்தர் ஒப்பற்ற பயனைப் பற்று, வாழ்வாங்கு வாழவும் முருகப் பெருமானின் பரிபூரண அருளை அனைவரும் பெற வேண்டும் என்ற பொது நல நோக்கத்தோடும் சிலை உருவானதால் இயற்கையும் இசைந்து கொடுத்ததே காரணமாகும் என்று தெரிகிறது.

இந்த தண்டாயுதபாணி சிலையின் நெற்றியில் ருத்ராட்சம், கண், மூக்கு, வாய், கை விரல்கள், தோள்கள் என அனைத்தும் போகரின் கை வண்ணத்தால் உளியைக் கொண்டு செதுக்கப்பட்டது போலவே இருப்பது அபூர்வம்!

சிலையின் அருகில் சென்றால், இது வரை அனுபவித்திராத அருமையான சுகந்தமணம் வீசுவதை நன்கு அறியலாம்.

போகர், தன் மனைவிக்குக் கொடுத்த வாக்குப்படி, முருகன் சிலையை மேற்கு திசையை நோக்கி, அதாவது கேரளாவை நோக்கி இருக்கும்படி பிரதிஷ்டை செய்தார். முருகனின் பார்வை பட்டதாலேயே மலையாள தேசம் செழிப்பாக உள்ளதாக ஓர் கூற்றும் உண்டு

தமிழக பக்தர்கள், சபரி மலைக்கு இரு முடி கட்டி, யாத்திரை செல்வது வழக்கம்.... அதே போல, கேரள பக்தர்கள், பழனி மலைக்கு காவடி, பால்குடம் எடுத்து முருகனை தங்கள் குல தெய்வமாகவே எண்ணி வழிபட்டு வருகின்றனர்.

தண்டாயுதபாணியின் சிலைக்கு நான்கு விதமான பொருட்கள் மட்டுமே அபிஷேகம் செய்ய அனுமதிக்கப்படுகிறது. அவை, நல்லெண்ணெய், பஞ்சாமிர்தம், சந்தனம், விபூதி ஆகியனவாகும். மார்கழி மாதத்தில் மட்டும் பன்னீர் அபிஷேகம் செய்யப்படுகிறது. இவற்றில் சந்தனமும் பன்னீரும்

மட்டுமே சிரசு முதல் திருப்பாதம் வரை முழுக்காட்டும் விதத்தில் அபிஷேகம் செய்யப்படுகிறது. மற்ற பொருட்கள் சிரசின் மீது வைத்து உடனே அகற்றப்படுகிறது.
தண்டாயுதபாணிக்கு ஒரு நாளைக்கு ஆறு முறை மட்டுமே அபிஷேகம் நடைபெறுகிறது. ஐந்து நிமிடம் முதல் ஏழு நிமிடம் வரை மட்டுமே அபிஷேகம் நடைபெறும்.



இந்த சிலை மிகுந்த சூடாக இருக்கும். அதனால் இரவு முழுவதும் விக்ரத்தில் நீர்த்திவலைகள் வெளிப்படும். இந்த நீரை அபிஷேக தீர்த்தத்துடன் கலந்து, காலை நேர அபிஷேகத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு வழங்குகிறார்கள்.

அதே போல, இரவில் முருகன் சிலையின் மார்பில் வட்ட வடிவத்தில் சந்தனம் சார்த்தப்படுகிறது.
சாஸ்திரப்படி, செவ்வாய் கிரகத்தின் அதிபதி முருகன் என்பதை அறிவோம். அந்த செவ்வாய் கிரகத்தின் நேரடிப் பார்வை விழுகின்ற இடத்தில் பழனி மலை அமைந்துள்ளது் அதாவது, செவ்வாயின் கதிர்கள் பழனி மலையில் உள்ள முருகன் மீது பட்டு, எதிரொளிக்கிறது. ஒரு செல்போன் டவரில் கிரகிக்கப்படுகின்ற ஒலியலைகளை அந்த டவர் வாங்கி, நாடெங்கும் உள்ள செல் போன்களின் சிம் கார்டுகளுக்கு அனுப்புவது போல், இந்த சிலையில் குவியும் செவ்வாயின் கதிர்கள், இங்கு வருகின்ற பக்தர்களின் மீது பட்டு, சிறப்பினை நல்குகிறது.

செவ்வாயினால் வீடு மற்றும் நிலபுலன்கள், தைரியம், வீரியம் முதலானவை இங்கு வரும் பக்தர்களுக்கு முருகப் பெருமானின் அருளால் உண்டாகும் என்பதே இங்குள்ள தண்டாயுதபாணி சிலையின் சிறப்பம்சமாகும்.
செவ்வாயின் ஆதிக்கம் கொண்ட பழனி மலை சென்று, செவ்வாயின் அதிபதியான தண்டாயுதபாணியை வணங்கினால்..... பக்தர்களுக்கு உறைவிடமும் உயர்வுகளும் பல்கிப் பெருகும் என்பது திண்ணம்.

~ ரா. பன்னீர்செல்வம்

# சிவ ஜோதி தரிசனம்

ஜோதி தான் பரம் பொருள்! அருட்பெருஞ்ஜோதி! அது வெறும் தீபம் மட்டுமல்ல. அனைத்து சீவன்களுக்குள் ஒளிரும் ஜீவ ஜோதி! ஜீவன் முக்தர்கள் மட்டுமே தரிசனம் பெறும் அருள் ஜோதி. பஞ்ச பூதங்களை படைத்த பரமேஸ்வரன் அந்த பஞ்ச பூத வடிவங்களாகவும் உள்ளான் என்பதை உணர்த்தவே பஞ்ச பூத தலங்களில் அருள் பாலித்து வருகின்றான்.

மகான்கள், சித்தர்கள், முனிவர்கள், யோகிகள் இவர்கள் முப்பொழுதும் மோன நிலையில் இருப்பவர்கள்.
அளவிடற்கரிய அஷ்டமாசித்தி பெற்றிருந்தும் தனக்காக பயன்படுத்தாதவர்கள். இறையருள் ஒன்றை



மட்டுமே சிந்திப்பவர்கள் உடைகள் பற்றியோ உறவினர்கள் பற்றியோ ஏன் உண்ணும் உணவைப் பற்றியோ துளி கூட சிந்திக்காமல் எந்த ஒன்றிலும் பற்றில்லாமல் ஈசனிடம் மட்டுமே சிந்தையை செலுத்தும் சிவ நேயர்கள் அவர்கள் பார்வையில் காடும் ஒன்று தான் நாடும் ஒன்றுதான்.

துறவிக்கு வேந்தனும் துரும்பு என்பதே நிதர்சனமான உண்மை. சுத்த தேகம், ஞான தேகம், பிரணவ தேகம் என முத்தேக சித்தி பெற்று மரணமிலா பெருவாழ்வு வாழும் ஆன்றோர்கள் இறைத் தூதுவர்களாக அருளாட்சி புரிகின்றனர்.

அவர்கள் உடலை மண்ணோ, நெருப்போ அழிப்பதில்லை. அந்த சக்தியும் அவற்றுக்கு இல்லை. அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்களோ அந்த நிலையிலேயே ஈசன் அருளில் ஐக்கியம் ஆகி விடுகிறார்கள்.

தொண்மையான சிவாலயங்களில் தரிசனம் செய்து வருங்கால் நம் மனம் அமைதியாகி விடுகிறது. ஜீவ முக்தர்கள் அல்லும் பகலும் தரிசனம் செய்கிறார்கள். அவர்களது ஜீவ காற்று நம் மீதும் படுவதால் நம் மனமும் தூய்மை அடைகிறது. தெளிவு பிறக்கிறது. மனம் மகிழ்ச்சியில் திளைக்க ஆரம்பிக்கிறது. கோயிலை விட்டு வெளியே வரும் போது அனல் தொற்றிக் கொள்கிறது.

அந்த அனல் வெறும் வெப்பக் காற்று மட்டுமல்ல, தீய எண்ணங்கள் கலந்த மாசு பெற்ற காற்றை உள் வாங்கும் போது தானாகவே அனல் பெருக்கெடுக்கத் தொடங்கி விடுகிறது.
இதைப் போக்கவே முடியாதா? முடியும்! எப்போது? ஈசன் கருணை இருந்தால் எளிதாக முடியும். வாய்ப்பு கிடைத்த போதும் எந்த ஒரு தவறும் செய்யாதிருப்பதும், மற்றவர்களுக்கு மனதால் கூட தீங்கு இழைக்காமல் இருப்பதும், செய்த உதவியை மறக்காமல் இருப்பதும், எப்போதும் அடுத்தவர் பசியை உணர்ந்து முடிந்த அளவு போக்குவதும், அனைவரது உணர்வுகளை மதித்து வாழ்வதும் கொண்ட கொள்கைகளாக கருதி மெய்யன்பர்களாக வாழ்பவர்களுக்கு அனல் தெரியாது புனல் மழையில் -

ஈசனின் அருள் மழையில் நனைந்து களிப்புறலாம்.
கோயில் தரிசனம் மட்டுமே போதுமா? போதும் எளியவர்களுக்கு.
எளியவர்கள் என்றால் யார்? எல்லோருமே எளியவர்கள் தான்.

எல்லாம் வல்லவர் ஈசன் மட்டுமே! கல்லாதவர்களாக, கற்றவர்கள் பக்கம் நில்லாதவர்களாக இருக்கலாம், கற்றறிந்த மேதைகளாக இருக்கலாம், ஏழைகளாக இருக்கலாம், செல்வந்தவர்களாக இருக்கலாம், குழந்தைகளாக இருக்கலாம், முதியவர்களாக இருக்கலாம், இளைஞர்களாக இருக்கலாம். எவராக இருந்தாலும் ஈசன் படியளப்பார்! அவரவர் தொழிலை தெய்வமாக நினைத்து தங்கள் திறமைகளே செல்வங்களாக உணர்ந்து உண்மையாக உழைத்து, பெண்களை தெய்வங்களாக மதிக்கா விட்டாலும் சக மனுஷியாக மதித்து - நல்ல மனிதனாக இந்த பூமியில் வாழ்ந்து முடிக்கும் போது - அவன் மனம் பூரணத்துவம் அடைகிறது. முடிவில்லா பேரின்ப பெருவாழ்வு அவனால் பெற முடியும்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்



KABA SURA KUDINEER
15 herbs effective against Viral infections, fever, cough and breathing difficulties
Call: 88702 88701

# தீய சக்திகளிடம் இருந்து விடுபட

தீய சக்திகளிடம் இருந்து விடுபட்டு தன்னை தற்காத்துக் கொள்ள ஸ்ரீ நரசிம்மர் எந்திரம்

ஸ்ரீ விஷ்ணு பகவானின் நான்காம் அவதாரமான ஸ்ரீ நரசிம்ம பகவான் ஆனவர் பாதி மனித உருவமும் பாதி மிருக உருவமும் உடைய அவதாரமாகும். அரக்க குணம் படைத்த ராஜாவான இரண்யகசிபுவை அழிக்க மனித உடலும் சிங்கத்தின் தலையும் பொருந்திய உருவம் கொண்ட ஸ்ரீ நரசிம்ம பகவான் ஆக அவதாரம் எடுத்தார். நாம் ஸ்ரீ நரசிம்ம எந்திரத்தை தினமும் பூஜை செய்து வந்தால் ஏவல், பில்லி சூனியம் மற்றும் செய்வினை போன்ற தீய சக்திகளால் நாம் பாதிக்கப் பட்டிருந்தால் அதிலிருமந்து நாம் விடுபடவும் இந்த மாதிரியான எதிர்மறை சக்திகள் நம்மை தீண்டாமல் இருப்பதற்கு ஸ்ரீ நரசிம்மர் எந்திரம் வழிவகை செய்கிறது. இதற்கும் மேலாக எதிரிகளை வெல்லவும், வழக்கு வியாஜியங்களில் வெற்றிபெறவும் இந்த ஸ்ரீ நரசிம்மர் எந்திரம் உதவுகிறது. இது மட்டும் அல்லாது பேய், பிசாசு, காத்து கருப்பு மற்றும் திருஷ்டி தோஷத்திலிருந்தும் விடுபட மிகச்சிறந்த எந்திரமாகும். ஸ்ரீ நரசிம்ம எந்திரத்தை வீட்டின் கிழக்கு, வடக்கு அல்லது வடகிழக்கு திசையில் வைத்து எந்திரத்தை பூஜை அறையில் வைத்து தினமும் காலை குளித்துமுடித்துவிட்டு, செந்தூர திலகமிட்டு, செவ்வரளி போன்ற சிகப்பு வண்ண மலர் கொண்டு பூஜித்து, தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் அனைத்து விதமான துஸ்ட சக்திகளிடமிருந்து தன்னை தற்காத்துக் கொள்ளலாம்.

**ஸ்ரீ நரசிம்மர் மந்திரம்:**

ஓம் ஸ்ரீ நரசிம்மாய நமஹ



~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

# எதிரிகளை வென்றிட

அன்னை லலிதாம்பிகையின் அழகை மெய்மறந்து ஆராதிக்கும் சௌந்தர்ய லஹரியின் 7 வது பாடல் "எதிரிகளை வென்றிட"....அருள்புரியும் மந்திரப் பாடலாக விளங்குகிறது.

இன்று எதிரே வந்து மல்லுக்கு நிற்பவன் மட்டும் எதிரியல்ல முகம் தெரியாமல் முதுகுக்குப் பின்னால் நிற்போரும் காரணமே இல்லாமல் எதிரிகளாகும் நிலை உள்ளது அப்படிப்பட்ட - எதிர்வரா எதிரிகளையும் எதிர்ப்புகளையும் இடம் தெரியாமல் விரட்டிட இந்தப் பாடல் மந்திரமாய் மாறி மகிமை செய்கிறது

**மந்திரப் பாடல்:**

"க்வணத் காஞ்சீ - தாமா கரிகலப - கும்ப - ஸ்தன நதா பரிக்ஷீணா
மத்த்யே பரிணத - சரத்சந்திர -வதனா தனுர் பாணான் பாசம் ஸ்ருணி -
மபி தத்தானா கரதலை: புரஸ்தா - தாஸ் தம் ந: புரமதிது - ராஹோ -
புருஷிகா"



**பாடலின் பொருள்:**

சலங்கைகள் ஒலிக்கும் ஒட்டியாணம் அணிந்த அன்னையே! சிறுத்த இடை, பருத்த தனங்களோடு கையிலே கரும்பு வில், மலர் அம்புகளும் பாச, அங்குசமும் தாங்கி முழுநிலவாய் முகம் படைத்தவளே!....

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளான பரமனின் அகண்ட, அகம்பாவ வடிவினைக் கொண்டவளே! என்னுடைய கண்களுக்கு எதிரில் தோன்றி, என் எதிரிகளையும் எதிர்வினைகளையும் வெல்லும் ஆற்றலைக்கொடு, அம்பிகையே!....

**மந்திரத்தை பிரயோகிக்கும் முறை:**

தங்கம் அல்லது தாமிரத் தகட்டில் முழுவதுமாக விபூதியைப் பரப்பி, அந்த விபூதியில் இந்த மந்திரத்திற்கான யந்திரத்தை வரைந்து கொள்ள வேண்டும்.

வடகிழக்கு முகமாக அமர்ந்து 45 நாட்கள், தினமும் 1000 முறை வீதமாக இம்மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.

குங்குமத்தினால் துர்க்கா சகஸ்ரநாம அர்ச்சனை செய்தல் நலம்.

வெண்பொங்கல், தயிர், பால் பாயசம் மற்றும் பழச் சாறு ஆகியவற்றை நைவேத்யம் செய்ய வேண்டும்.

மேற்கண்ட முறையில் பூஜையில் ஈடுபட்டு மந்திரப் பிரயோகம் செய்வதால் எதிரிகளையும் வசீகரம் செய்யலாம்.

எதிரியே வசீகரம் ஆன பின்பு, எதிர்ப்பு ஏது? எதிரிகள் ஏது? வென்றிடலாம்!

~ ரா. பன்னீர்செல்வம்

# ஆழ்வார்கள் போற்றிய அரங்கன்!

சாத்திர மரியாதையுடன் செய்யப் பெறும் பக்தியே உகந்தது. உலகத்தின் ஆதாரம் தர்மமே! தர்ம நெறி தவறாது பக்தி செலுத்துபவனே உயர்ந்த அடியவன். ஆழ்ந்த பக்தி கொண்ட அத்துணை பேருமே ஆழ்வார்கள் தான்! நல்லொழுக்கத்தாலேயே தர்மம் காப்பாற்றப்படுகிறது. ஒழுக்கம் தவறினால் என்ன விளைவு ஏற்படும் என்பதை இராமாயணம் தெளிவு படுத்துகிறது.

கதிரவன் ஆகாயத்தில் தான் பவனி வருகிறது! பொய்கையிலோ தாமரை மலருகிறது! சந்திரன் உதயமாகிற போது சகோர பறவை மகிழ்வுடன் ஆர்ப்பரிக்கிறது. மழை, மேகத்தை கண்டதும் மயில் தன் தோகையை விரித்து ஆடுகிறது. அதுபோன்று தொலைவில் தலைவன் தலைவி உடலால் பிரிந்து இருந்தாலும் பிரியமானது வளருமே தவிர குறையாது.

ஆழ்வார்கள் மட்டும் விதிவிலக்கா? அரங்கன் மீது அளவற்ற பக்தியில் திழைத்ததாலே தான் நாலாயிர திவ்விய பிரபந்தம் எழுந்தது!

பன்னிரண்டு ஆழ்வார்களுமே பெரும் பக்தி நலம் கொண்டவர்களாக இருப்பினும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் முதல் ஆழ்வார்கள் என்று போற்றப் பெறுகின்றனர். முதலாழ்வார்கள் மூவரும் திருமழிசை யாழ்வாரும் திருமாலிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு திகழ்ந்தார்கள். விஷ்ணு சித்தர் எனப்பெறும் பெரியாழ்வாரும், ஸ்ரீ ஆண்டாளும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். குலசேகராழ்வார், இராமாவதாரத்தை மிகவும் போற்றுகிறார். திருமங்கையாழ்வாரும் திருமால் பெருமை பேசுவதிலேயே முப்பொழுதும் காலத்தை செலவிட்டார்!

திருப்பாணாழ்வாரும், தொண்டரடிப் பொடி ஆழ்வாரும் அனந்த பத்ம நாபனிடத்திலேயே மிகுந்த ஈடுபாடு கொண்டு திவ்விய பிரபந்தங்களை அருளி உள்ளனர்.



அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி சென்றங்குத்
தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி
பொறைச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கலோ ரெம்பாவாய்

என்று சூடிக் கொடுத்த சுடர்க் கொடி கோதை ஆண்டாள் பெருமாளை இவ்விதமாக இனிதே போற்றுகின்றார். ஆண்டாள் அமுதத்தமிழை மட்டுமா ஆண்டாள்? அரங்கனையே ஆண்டாள்.

திரு விக்கிரம அவதாரம் எடுத்து இப்பூவுலத்தை அளந்த திருவடிகளை போற்றிய ஆண்டாள்

மூன்றாவது பாசுரமான ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி என்றும்,
"சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி" என்றும் குடையாய் எடுத்தாய் குணம் போற்றி என்றும், திருப்பாவையில் பெருமாளின் அவதாரச் சிறப்புகளை ஸ்ரீ ஆண்டாள் பட்டியலிடுகின்றார்.
கவிச் சக்ரவர்த்தி கம்பனை கம்ப நாட்டாழ்வார் என்று சிறப்புற போற்றுவது உண்டு.
கம்பன் தன் இராம காவியத்தில்

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த
உலகுக்கெல்லாம்
உய் வண்ணம் அன்றி, மற்றோர் துயர்வண்ண
முறுவதுண்டோ?
மை வண்ணத்து அரக்கி போரில் மழை வண்ணத்து
அண்ணலே உன்
கை வண்ணம் அங்குக் கண்டேன் கால் வண்ணம் இங்குக் கண்டேன்
என்று கம்பரின் கவிதைக்கு,
முன்னை வண்ணம் பாலின் வண்ணம் முழுதும்
நிலை நின்ற
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்
வண்ணம் எண்ணுங்கால்
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் புரையும்
திருமேனி
இன்ன வண்ணம் என்று காட்டீர் இந்தளூரிரே

என்னும் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி பாசுரம் முன்னோடியாக திகழ்கிறது.

கண் வண்ணம் அங்கே கண்டேன்
கை வண்ணம் இங்கே கண்டேன்
பெண் வண்ணம் நோய் கொண்டு வாடுகின்றேன்

என்று கவியரசு கண்ணதாசன் தெளிவுரை எழுதிய பாங்கும் சுவைக்கத் தக்கது தானே!
பாயும் நீர் அரங்கம் தன்னுள் பள்ளி கொண்ட மாயனார் திரு நன் மார்பும் மரகத வுருவம் தோலும் தூய தாமரைக் கண்களும் துவரிதழ்ப் பவள வாயும் ஆயசீர் முடியும் தேசும் அடிய ரோர்க்கு அகலலாமே?
என்பது தொண்டரடிப் பொடியாழ்வாரின் இனிய திருமாலையாகும்.

அன்பெனும் கயிற்றால் அன்போன்யம் கட்டப் படுவதைப் போன்று பெருமாளிடத்திலே சரணாகதியாகி, நாராயணா நாராயணா என்று அன்பொழுக அழைத்தாலே போதுமே ஓடி வந்து, அருள்வான் ஓங்கி உலகளந்த உத்தமன்! ஒரு குழந்தை அழைத்தற்காகவே ஒரு அவதாரம் எடுத்தவன் மாலவன் தானே யார் அழைத்தவர்கள் என்பதை விட எப்படி அழைத்தார்கள் என்பதையே பகவான் பார்ப்பார்! ஆழ்வார்களுக்கு மட்டுமா அருள்வான் ஆழ்ந்த பக்தி கொண்ட அனைவருக்குமே அருள் பாலிப்பான் ஸ்ரீ அனந்த பத்ம நாபன்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# துத்தி

இயற்கை, பூமிக்குக் கொடுத்த வரங்கள் தான் தாவர வகைகள்! இந்த தாவரங்களில் உடலை செம்மையாக பாதுகாக்கும் தாவரங்களைக் கண்டறிந்து, அவற்றிற்கு மூலிகை எனப் பெயரிட்டு பயன்பாட்டு முறைகளை வகுத்தனர் சித்தர்கள்! இதுவே, சித்த வைத்தியம், மரபு வைத்தியம், தமிழ் வைத்தியம் என பல்வேறு பெயர்களால் வழங்கப்பட்டு, காலங்காலமாக நன்மை பயத்து வருகின்றன. அந்த வகையில் இன்று நாம் காணவிருப்பது "துத்தி" என்னும் அற்புத மூலிகையாகும். சாலையோரங்களிலும், வேலிப் பகுதிகளிலும் சாதாரணமாக காணப்படும் தாவரமே துத்தி! இது பல அபூர்வ சக்திகளை தன்னிடத்தே கொண்டுள்ளது.

### துத்தியால் குணமாகும் நோய்கள்:

உடல் சூடு, அஜீரணம், வயிற்றுப்போக்கு, ஆண்களின் விந்துநீர்த்தல், தோல் வியாதிகள், கை, கால் வீக்கம், மலச்சிக்கல், பல்வலி, ஈறுவீக்கம் போன்ற பல்வேறு நோய்களை குணப்படுத்தக்கூடிய ஆற்றல் இந்த மூலிகைக்கு உள்ளது!

### பயன்படுத்தும் முறை:



இதன் இலைகளை இடித்து, சாறெடுத்து காய்ச்சிக் குடிக்க வயிற்றுப்போக்கு, அஜீரணக் கோளாறுகள் நீங்கும்.
துத்திக் கீரைகளை ரசம் வைத்து அருந்த சிறுநீர் பிரிந்து, சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும்.
துத்திக்கீரையில் பாசிப்பயிறு, நெய் கலந்து சாப்பிட்டு வர, மலச்சிக்கல் நீங்கும். துத்தி இலைகளைக் கொதிக்க வைத்த நீரில் வாய் கொப்பளிக்க பல்வீக்கம், ஈறுவலி மறையும்.
தசைப்பிடிப்பு, வீக்கம், புண்களுக்கு துத்தி இலைகளை அரைத்துக் கட்ட சரியாகும்.
கைப்பிடி இலையை பசும்பாலில் பனங்கற்கண்டு சேர்த்து காலை, மாலை குடித்து வர, விந்து நீர்த்தல் பிரச்சினை சரியாகும்.
மூல நோய் எதுவாக இருப்பினும் துத்தி காயை காயவைத்து பொடியாக்கி, 15 நாட்கள் காலை, மாலை சாப்பிட மூலநோய் குணமாகும்.
குடிக்க முடியாதவர்கள் துத்தி இலைகளை நல்லெண்ணெயில் வதக்கி, ஆசனவாயில் வைத்து காட்டினால் விரைவாக குணமாகும்.
அரிய மூலிகையாம் துத்தியை பயன்படுத்தி நலம் பெறுங்கள்.

~ ரா. பன்னீர்செல்வம்

# இயற்பகை நாயனார்

"அடியார் தொண்டே ஆண்டவன் தொண்டு"
"அடியாரை வணங்கிட ஆண்டவன் அருள்வான்"
"தொண்டரின் உள்ளத்துள் உறையும் தூயவன்"

இப்படிப்பட்ட சொற்றொடர்களால் போற்றிப் புகழப்படும் இறைவன் சிவ பெருமான் என்பதை நாம் நன்கறிவோம்!

தொண்டர்கள் உள்ளத்தில் தூயவன் அடங்கியிருக்கிறான் என்பதை உலகுக்கு உணர்த்திய சிவ பக்தர்களையே இறைவன் ஈசன் நயந்து போற்றி நாயன்மார் என்னும் நனிசிறந்த புகழினைப் பெறுமாறு அருளியிருக்கிறான் என்றால் தொண்டர் தம் பெருமையை என்னவென்று சொல்வது?



சமயக் குரவர்கள், தொகையடியார்கள், நாயன்மார்கள் அனைவருமே, சிவத் தொண்டு என்பது சிவனடியார்களுக்கு செய்யும் தொண்டாகும் என்பதனை உணர்ந்து, நமக்கு உணர்த்தியவர்கள்!

63 நாயன்மார்களின் வரிசையில் இப்போது இயற்பகை நாயன்மாரின் வாழ்க்கை முறை, பக்தி நெறி என்ன என்பது பற்றி காணலாம்.

கடற்கரை நகரமாம் அழகிய பேரூர், காவிரிப்பூம் பட்டிணம்! இதனை இன்று பூம்புகார் என அழைக்கின்றனர்!

இந்த காவிரிப்பூம் பட்டிணத்தில் ஓர் செல்வக்குடியில் பிறந்தவர் தான் "இயற்பகை!" தங்கள் குலத்திற்கு செல்வத்தையும் சீர்மேவும் வாழ்வையும் அருளிய சிவ பெருமானையே சிந்தையில் தியானித்து, சிவனடியார்களுக்கு செய்யும் தொண்டே கயிலாய வாசத்தைக் கொடுக்கும் என்கிற இறை நம்பிக்கை கொண்டு சிவனடியார்களைப் போற்றிப் பணிந்து வணங்கி வந்தார்!

சிவனடியார் என்று ஒருவர் கண்ணிலே பட்டுவிட்டால், அவர் மனதால் நினைப்பதை மறுகணமே செய்து முடிக்கும் நல் உள்ளம் கொண்டவர் இயற்பகை என்பதனை ஊரே அறியும் அதுமட்டுமல்ல சிவனடியார்கள் எதைக் கேட்டாலும் இல்லையென மறுக்காமல் - எதையும் யோசிக்காமல் கொடுக்கின்ற குணம் இயற்பகையாருக்கு இருந்தது!

இளம் மனைவியோடு இனிய இல்லறம் நடத்தி வந்த அவரை, அவரது உறவினர்கள் மெச்சினாலும் அடியவர்களுக்கு அள்ளிக் கொடுத்தே அத்தனை செல்வத்தையும் கரைத்து விடுவாரோ என அச்சமும்

கொண்டனர்.

ஆனால், இயற்பகையோ செல்வதை மதித்தாரில்லை. சிவம் இருக்க செல்வம் எதற்கு? அடியார்களின் ஆனந்தமே அழியா செல்வம் என சிவனடியார்கள் கேட்டதை எல்லாம் கொடுத்து வந்தார்! அவரது மனையாளும் இந்த இறைத்தொண்டில், கணவனோடு தன்னை இணைத்துக் கொண்டாள்.
சிவாலயங்களுக்கு இவர் செய்த திருப்பணிகளைக் காட்டிலும் சிவனடியார்களுக்கு செய்த அரும்பணிகள் ஏராளம்!
தினந்தினம் சிவனடியார்களைக் கண்டு வணங்குவதும் அவர்களை உபசரித்து, உணவு வழங்கி, கேட்டதைக் கொடுப்பதும் தான் அன்றாட வாழ்க்கை என ஆகிப் போனது!
சிவநாமம் சொல்லியபடி ஊரெல்லாம் அலைந்து திரிந்து, புண்ணியத் தலங்களுக்கு சென்று புனித நீராடுவதையே தொழிலாகக் கொண்ட சிவனின் அடியார்களுக்கு வாரிக் கொடுப்பதால் என்ன புண்ணியம் சேர்ந்து விடப் போகிறது!? இதே ஆலயங்களுக்கு அள்ளிக் கொடுத்தால் ஆண்டவனின் அருளாவது மிஞ்சுமே, என பலர் சொல்லியும் "அடியவர் தொண்டே ஆண்டவன் தொண்டு" என்பதில் உறுதியாய் இருந்தார், இயற்பகை!
இப்படிப்பட்ட பக்தரை - சிவத்தொண்டரை இறைவன் சோதிக்காமல் விடுவானா?
தன் பக்தனின் மனோபலம் எப்படிப்பட்டது? அவனது பக்திநெறி எத்துணை பவித்திரமானது? என்பதை அறிய இறைவனே களம் இறங்கினான்!
ஆம்!...
சிவனே, ஒரு சிவத்தொண்டராய், அதாவது ஆண்டவன் புகழ்பாடும் அடியவராய் உருமாறி, காவிரிப்பூம் பட்டிணத்திற்கு வந்தார்!
சிவனடியார் வேடத்தில் இருந்த சிவ பெருமான், முதலில் ஆலயம் சென்று ஆண்டவனை தரிசனம் செய்துவிட்டு, நமசிவாய நாமம் சொன்னபடி இயற்பகையார் இல்லம் இருந்த வீதியில் வந்து கொண்டிருந்தார்!
கட்டுக்குடுமி, காவி உடை, நெற்றியில் மட்டுமின்றி உடலெங்கும் திரு நீற்றுக் கீற்றுகள் சிவப் பழமாக ஒரு சிவனடியார் வீதியில் வரும் போது அடியார்க்கு அடியாரான இயற்பகைக்கு தெரியாமல் போகுமா? அவரது உள்ளுணர்வு உந்தித்தள்ள, ஓட்டமும் நடையுமாய் வீதிக்கு வந்து பார்வையை ஓடவிட்டார்?
அதோ.... சிவனடியார் வருவது தெரிந்தது! ஓடோடிச் சென்று, வணங்கி அவரை பணிவுடன் வரவேற்று இல்லத்திற்கு அழைத்து வந்தார்!....
சிவனடியாரை ஆசனத்தில் அமர வைத்து, கணவன்,மனைவி இருவரும் அவருக்குப் பாதபூஜை செய்தனர்! அடியாரின் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டனர். தூய்மையோடு சமைக்கப்பட்ட உணவினை இயற்பகையின் மனைவி பக்தியோடு பரிமாற, இயற்பகை பணிவோடு அருகிலிருந்தவாறே அகம் குளிர்ந்தார்.

உணவு, உபசாரமெல்லாம் முடிந்தது! மிக மிக திருப்தியோடு புறப்படத் தயாரான சிவனடியாருக்கு புதிய வஸ்திரங்களை வழங்கினார் இறைபகையார்!
அதைப் பார்த்து சிரித்த சிவனடியார், "இயற்பகை.....சிவனடியார்கள் எதைக் கேட்டாலும் கொடுக்கின்ற உத்தமன் நீ என அனைவரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். இப்போது, நான் கேளாமலே வஸ்திரம்

கொடுக்கிறாயே", எனக் கேட்டார்!

"அடியார்களுக்கு வஸ்திரம் கொடுப்பது எனது வழக்கம் சுவாமி", என்றார் இயற்பகை!

"தேவை இல்லத்தைப் பெறுவது எனக்கு வழக்கமல்ல இயற்பகை", என்றார் அடியவர்!

"தங்கள் தேவை என்னவென்று வேண்டியதைக் கேளுங்கள் சுவாமி", இயற்பகை பணிவுடன் கேட்க,

"எனக்கு வேண்டியதைக் கொடுக்க உன்னால் முடியுமா? உனக்கு மனம் தான் வருமா?"அடியவர், பூடகமான புன்முறுவலோடு கேட்டார் - "சுவாமி..... அடியேன் பிறவி எடுத்ததே இறைவனின் அடியார்களுக்கு தொண்டு செய்திடத்தான் என்ன வேண்டுமென்று கட்டளையிடுங்கள் என்னிடம் உள்ளது எதுவாயினும் என் சக்திக்கு உட்பட்டது எதுவாயினும் மனமுவந்து தருவேன்!.

"கேட்டபின்பு மறுக்க மாட்டாயே?"

"மறுத்தால் இந்த மானிடப் பிறப்பே வீண் என்று மரணித்து விடுவேன் சுவாமி," எதுவாயினும் கேளுங்கள்! என் உயிரையே கேட்டாலும் அந்த ஆண்டவன் கேட்டதாய் ஆனந்தத்தோடு அளிக்கிறேன்!"

"உன் உயிர் எனக்கெதற்கப்பா! உணவு பரிமாறும் போதே கவனித்தேன்.....உன் உயிரினும் மேலானவள் உன் மனைவி அல்லவா? அடியவர் கேட்க,

"ஆம், சுவாமி!" புன்னகை மாறாமல் பதிலளித்தார் இயற்பகை?

"நான் வேண்டுவதும் அதைத் தான்... உன் மனைவியைத் தான் வேண்டுகிறேன்! கொடுப்பாயா?" அடியவர் இவ்வாறு கேட்டதும் ஒரு நொடி புன்னகை மறைந்து, அதிர்ச்சி அலைமோதியது, இயற்பகையின் முகத்தில்! அதுவும் ஒரு நொடி தான்!

புன்னகை ததும்ப மனைவியின் கரத்தைப் பற்றி, அடியவரின் கைகளில் கொடுத்தார்! அவரது மனைவியோ, அதிர்ச்சி அடைந்தாலும் அதை மறைத்தவாறே, கணவனின் கட்டளையே சாசனம் என்பது போல் வேறெதுவும் பேசாமல் நின்றார்!

"தங்களுக்கு திருப்தியா சுவாமி? வேறேதாவது ......." என பணிந்து நிற்க.....சிரித்தவாறே மனைவியின் கரத்தைப் பற்றியபடி புறப்பட்டார்!

வீட்டு வேலைக்காரி மூலமாக செய்தியறிந்த உறவினர்களும் நண்பர்களும் மிகுந்த கோபத்தோடு இயற்பகையின் இல்லம் நோக்கி வரத்தொடங்க....... அடியவர் இயற்பகையின் மனைவியோடு வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினார்.

"இவனெல்லாம் சிவனடியாரா?".....

"அடுத்தவன் மனைவி மீது ஆசைப்பட்ட அற்பன்"......

"அவனை கல்லால் அடித்தே கொல்வோம்", என ஆளாளுக்கு ஆவேசமாய்ப் பாய, உருவிய வாளுடன் குறுக்கே பாய்ந்த இயற்பகை, சிவனடியாரின் கழுத்தைப் பிடித்த உறவினர் ஒருவரை வாளால் வெட்டி வீழ்த்தினார்!


ஒரே களேபரம்!

இயற்பகை எத்தனை பேரை வெட்டி வீழ்த்தினார் என அதிர்ச்சியுடன் எண்ணத் தொடங்கினர் சிலர்! ஆவேசம் குறையாமல் ரத்தக்கறை படிந்த வாளுடன் அடியவருக்கும் தன் மனைவிக்கும் பாதுகாப்பாய், அவர்களை யாரும் தடுக்காத வண்ணம் கர்ஜனையோடு காவலாய் சென்றார் இயற்பகை!

"கட்டிய மனைவியை கண்டவனோடு அனுப்புகிறானே", என முணுமுணுத்த படி அனைவரும் உயிருக்குப் பயந்து ஒதுங்கி நின்றனர்.

ஊரின் எல்லை வந்துவிட்டது!
அடியவர் இயற்பகையை நோக்கி," இனி உன் பாதுகாப்பு வேண்டாம் ஊர் எல்லையை அடைந்து விட்டோம்! நீ செல்லலாமப்பா!" என்றார்!
இருகை கூப்பி வணங்கிய இயற்பகை, தன் மனைவியைக் கூட ஏறெடுத்துப் பார்க்காமல் திரும்பி நடக்கத் தொடங்கினார்.
"இயற்பகை .....நில்!" என்ற சத்தம் கேட்டு திரும்பிப்பார்க்க ....இயற்பகையின் மனைவி மட்டும் நின்று கொண்டிருந்தாள்!
இயற்பகை அடியவரைக் காணாமல் அதிர.....
இறைவன் ஈசன், தேவி பார்வதியோடு தரிசனம் தந்தார், கண்ணீர் மல்க வணங்கினர் கணவனும் மனைவியும்!
அடியவர் கேட்டதற்காக, தன் மனைவியையே கொடுத்து செயற்கரிய செயல் செய்ததால் இயற்பகையார் நாயன்மார் என்ற பெரும் புகழுடன் வணங்கப்படுகிறார்.

~ ரா. பன்னீர்செல்வம்

SWASASUGAM SYRUP
For Clearing Respiratory Tract
Call: 88702 88701

# வியப்பூட்டும் மகான்கள்
# குரு கொண்ட கோபம்

"காணாத காட்சி எலாம் கண்ணில் கண்டு
காகமடா புசுண்டர் என்று பேரும் பெற்றேன்
காகம் என்ற ரூபமாக இருந்துகொண்டு
காரணங்கள் அத்தனையுமே தருவாய் பார்த்து
வேகமுடன் வெளியோட்ட நிலையாய்ப் பார்க்க
வெகுதூரம் சுற்றி இன்னும் விபரம் காணேன்"

என்ற பாடலை ஆக்கியோர் காக புஜண்டர் என்ற மகான். பெரும்பாலும் காக வடிவிலேயே வாழ்ந்து பல அற்புத நிகழ்ச்சிகளை கண்டு உலகிற்குக் காட்டியவர் இவர். இம் மகானின் அவதாரமே சுவையான ஒன்று.



கைலயங்கிரி ஒரே உற்சாக வெள்ளத்தில் மூழ்கியிருந்தது அன்று. சக்தி கணங்கள் மனம் நிறைய மதுவை அருந்தி தள்ளாட்ட போதையில் ஆழ்த்தி ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தன. தரைப் பகுதியில் ஆங்காங்கே மதுக் கலயத்திலருந்து தளும்பி விழுந்த துளிகள் சிந்தி சிந்தி சின்ன குட்டைகளே செயற்கையாக உருவாகியிருந்தன. அங்கே பக்கத்தில் தடாகத்தில் சுற்றிச்சுற்றிவந்து கொண்டிருந்த சில அன்னங்கள் அந்த மதுக் குட்டைகளை நோக்கி ஆவலோடு ஒடி வந்து அதனை நக்கி பார்த்து, ஆனந்தப்பட்டதோடு, அதன் விளைவால் ஜோடியாக குதிக்கத் தொடங்கின. சக்தி கணங்களும் தங்களை மீறிய களிவெறியில் கூத்தாடத் தொடங்கிவிட்டன. இத்தனை காட்சிகளும் நடந்து கொண்டிருந்த இடத்தில் சிவபிரானும், உமாதேவியும் எழுந்தருளி இவைகளை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது கயிலை நாதனின் சித்தப்படி, உற்சாக வெள்ளத்தில் தங்களை மெய்மறந்து ஆட்டம் போட்டுக்கொண்டிருந்த இரண்டு அன்னங்களின் மீது சிவகனல் திடீரென்று பாய்ந்தது. அதன் விளைவாக பெண் அன்னம் கர்ப்பமுற்று, இருபத்தியொரு முட்டைகளை இட்டது. அவை குஞ்சாகப் பொரிகையில் 20 குஞ்சுகள் அன்னங்களாகவும், 21 வதாக வந்தது காகமுமாக அமைந்துவிட்டது. இக்காகமே அழிவில்லா நிலைபெற்ற, பெரும்பாலும் தான் பிறந்த வளர்ந்த காகமாக வாழ்ந்த பெருமைபெற்ற காக புஜண்டர் எனும் ஞானியாகிவிட்டது. இவருக்கு பரமசிவன் அருளியதால் பிரளய

காலத்தில் கூட அழிவின்றி இருந்தார்.

இளமைக்காலத்தில், பூலோகத்தில், இளைஞனான காக புஜண்டரை ஆதரித்தவர் உஜ்ஜயினி நாட்டு அந்தணரொருவர், காக புஜண்டரின் தீவிர சிவபக்தியும், அவர் கொண்டிருந்த ஞானமும், அவரை வளர்த்தவருக்கு மிக்க மகிழ்ச்சியைத் தரவே, நாளடைவில் புஜண்டரை தனது மகனைப் போலவே அன்புடன் நடத்தி வந்தார்.

தவிர தனக்குத் தெரிந்த கலைகள் அனைத்தையும் அந்த வளர்ப்பு மகனுக்கு கற்றுக் கொடுத்தார். இதனால் அந்தணர் ஒரு ஆதரிப்பாளராக மட்டுமன்றி, புஜண்டருக்கு ஒரு மறைமுக குருவும் ஆனார். அந்தணருக்கு புஜண்டரின் மீது கொஞ்சம் மனவருத்தமுண்டு. காரணம் புஜண்டர் தீவிர சைவராகியிருந்து கொண்டு, பெருமாள் பக்தர்கள் மீது அளப்பரிய வெறுப்பைக் காட்டி வந்தது தான். இது பற்றி அந்த பிள்ளையிடம் பலமுறை அக்குருநாதர் எடுத்துச் சொல்லியும், அவர் தன் தீவிரவாதத்தில் மிகப் பிடிவாதமாகவே இருந்து வந்தார்.

இந்த குருநாதரும், அவரது அன்பு சீடனும் உஜ்ஜயினி மகா காலர் ஆலயஞ்சென்று தவறாது சிவ வழிபாடுகளை செய்து வந்தார்கள். அச்சமயங்களில் தன் கண்ணில் படும் வைணவ பக்தர்களிடம் தனது காழ்ப்புணர்ச்சியை புஜண்டர் வெளிப்படுத்த தவறுவதில்லை.



அன்றும் வழக்கம் போல் சிவாலயத்தில் அமர்ந்த நிலையில் இருந்து புஜண்டர் இறை நாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தார். அப்போது தன் வழிபாடை மேற்கொள்ள குருநாதர் கோவிலில் நுழைந்து, தனது சீடன் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தார். எந்த சீடனும், தன்னுடைய குருநாதரைக் கண்ட மாத்திரத்தில் எழுந்து நின்று கை கூப்பும் முறை என்றும் உண்டு. ஆனால் தான் கலைகள் கற்றுக் கொண்ட அந்தணரிடம் அளப்பற்ற சலுகைகள் எடுத்துக் கொள்ளும் வழக்கமுடைய அந்த மாணவர் அன்றும் அதனை பயன்படுத்திக் கொண்டார் போலும், அதனால் அவர் குருநாதரைப் பார்த்துவிட்டாலும், அதற்காக எவ்வித மரியாதையும் காட்டாது அலட்சியமாக இருந்து விட்டார். இதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை அந்த மகா பண்பு கொண்ட குருநாதர்.

ஆனால் ஆலய இறைவனான மகா காலர் இக்காட்சியைக் கண்டுவிட்டு பெருஞ்சினங்கொண்டார். தன் அடியவரான அந்த அந்தணரின் சீடன் குருவை அவமதிப்பதா? கொதித்தெழுந்த சிவபிரான், அந்த குருவிற்கும், சிஷயனுக்கு கேட்குமாறு அசரீரி குரலில், புஜண்டரைப் பார்த்து "நிர் மூடமே! எத்தனை கலைகள் பயின்று, எத்தனை நூற்களை நீ படித்து தான் என்ன பலன்? உனது இந்த அற்பச்செய்கை மூலம், நீ புழுவிலும் கேவலமானவன் ஆகிவிட்டாய்!

உனது குருநாதரின் எதிரிலேயே மலைப்பாம்பு போன்று அசையாமல் இருந்த காரணத்தால் இக்கணம் முதல் பாம்பு வடிவம் பெற்று மரப்பொந்துகளில் வாழ்வாய்" என்று சாபமிட்டார்.

இதனால் இடியுண்ட நாகம் போல் பதறிவிட்டார் காகபுஜண்டர். சட்டென்று இருப்பிடம்விட்டு எழுந்து அவர் நிற்க, அவரைவிட அதிக பதட்டமும், அச்சமும் கொண்டார் அந்த குருநாதர்.

"ஐயோ, எனது சீடனுக்கு இப்பேர்ப்பட்ட தண்டனையா?" உரத்தக்குரலில் அன்பினால் அழுதபடியே அவர் சிவபிரானை மனதாரத் துதித்து "புஜண்டர் அறியாமல் செய்த பிழையை ஈசன் பொறுத்தருள வேண்டும்" என மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

அந்தணர் கொண்ட அளப்பரிய சிவபக்தி சிவனுக்கு பிடித்தமானது என்பதால், அவரது பிராத்தனையை உடனடியாக ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக அடுத்து ஒலித்தது மீண்டும் அசரீரி.

"புஜண்டரே அறிந்து கொள்! பிரம்மஞானிகளாகப் போற்றப்படும் எந்த குருநாதனுக்கு அவமதிப்பு ஏற்பட்டாலும் முப்பெரும் தேவர்களின் ஆயுதங்கள் சும்மாவிருக்காது.

சிவ வைணவ பேதத்தை உடனே கைவிட்டு சமரசமாக வாழக் கற்றுக்கொள்.

இராமநாமம் இனி உன்னை என்றும் காக்கும். சிவசாபத்தை திரும்ப பெற முடியாது. எடுக்கப்போகும் உனது அத்தனை பிறவிகளிலும் உன்னை எத்தகைய துன்பமும் அண்டாது.

நீ என்றும் தத்துவ ஞானியாகச் சிறப்பாய்!"

இதனால் புஜண்டரைவிட, அவருடைய குருநாதரே மிக்க ஆனந்தமுற்றார் - சிவச் சாபத்தின் வீரியம் குறைந்ததால்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மலைப்பாம்பு உருவம் பெற்றுவிட்ட காகபுஜண்டர், விந்தியமலைப் பகுதியில் மரப்பொந்துகளில் அப்பிறவிக்குரிய காலம் முடிய வாழ்ந்து உயிர்விட்டு அடுத்த பிறவிக்குத் தாவினார். அடுத்தடுத்த பிறவிகளில் பல அதிசயங்களை அவர் நிகழ்த்தியுள்ளார்!

சித்தர்களுக்கெல்லாம் தலையாய ஆதிசித்தரான காகபுஜண்டர் பல ஆயிரக்கணக்கான வருடங்கள் கல்லால மரத்தில் வாழ்ந்து, பிரளயக் காலங்களிலும் கூட பாதிக்கப்படாது இருந்துள்ளார்.

காகபுஜண்டர் திருச்சியை அடுத்த சிற்றூர் உறையூரில் வாழ்ந்து அங்கேயே சமாதி கொண்டார் என நம்பப்படுகிறது.

காகபுஜண்டர் காவியம், புஜண்டர் நாடி ஜோதிட நூல், காகபுஜண்டர் உபநிடதம், காகபுஜண்டர் ஞானம் போன்ற பல நூற்கள், அந்த மகானின் சக்திகளை நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

ஆசிரியருக்கும், மாணவனுக்குமான உறவு நிலைகள் மிக பல ஹீனப்பட்டு வரும் தற்காலத்தில், காகபுஜண்டருக்கு சீடனாக ஏற்பட்ட அவலநிலை ஒரு பாடமாகவே அமையட்டும்!

"குரு பிரஹ்மா குருர் விஷ்ணுர் குருர் தேவோ மஹேச்வர: குரு சாட்சாத் பரம் பிரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம:

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்
துணை கலெக்டர் (ஓய்வு)

# அன்றாட வாழ்வில் பயன் தரும் அனுபவ மூலிகைகள்

இயற்கையாகக் கிடைக்கும் எண்ணற்ற மருத்துவ குணங்கொண்ட கொடி, செடி, கிழங்கு, பட்டை வகைகளைக் கொண்டு நமக்கு ஏற்படும் பலவகை நோய்களையும் குணப்படுத்தும் மருத்துவ முறையை, எத்தனையோ வருஷங்களுக்கு முன்பே கண்டுபிடித்து பல ஏட்டுச் சுவடிகளில் பதிவு செய்து வைத்துள்ளார்கள், நம் முன்னோர்கள்

மனிதனின் அறியாமையினால் பல மூலிகைகள் பற்றிய நுணுக்கங்கள், வெளி உலகிற்கு புலப்படாமலேயே உள்ளன. ஆனால், அறியப்பட்ட மூலிகைகள் பற்றிய உண்மைகள் இப்பொழுது பரவலாக மக்களால் உணரப்பட்டு பயன்படுத்தப்பட்டு, உடல் கோளாறுகள் பலவற்றை போக்கி வருவது கண்கூடு. அவற்றில் ஒரு சிலவற்றைக் காணலாம்.



### மாகாளிக் கிழங்கு

கடுமையான வெப்பக்காலத்தில் நமக்கு ஏற்படும் உடல் சூடு, சிறுநீர் போகையில் உண்டாகும் எரிச்சல் உணர்வு இவற்றைப் போக்க வல்லது மாகாளிக் கிழங்கு.

இக்கிழங்கைக் கொண்டு சர்பத் செய்து, அந்த பானத்தை அளவோடு குடித்து வர, நற்பலன் கிட்டும்.

இரத்தத்தை சுத்தம் செய்யும் குணமும், செரிமானத் தன்மையையும் அளிக்கக்கூடிய மாகாளிக் கிழங்கை ஊறுகாய் செய்தும் உண்ணலாம். சுவையாகவிருக்கும் அது.

### நாவல் பழம்




சிறு நீர் கழிக்கையில் ஏற்படும் எரிச்சல் மற்றும் நீர்க் கட்டுக்களை போக்கக்கூடியது நாவல் பழம். இனிப்பும், லேசான துவர்ப்புடன் கூடிய நாவற் பழத்தை சிறியோர்கள் முதல் பெரியோர்கள் வரை விரும்பி உண்பார்கள். நாவற் பழத்தை சாறு பிழிந்து தேவையான அளவு சர்க்கரை சேர்த்து தினமும் இரு வேளை குடித்து வர, மேலே சொன்ன உடற்கோளாறுகள் நீங்கும்

நாவல் பழ வகையில் ஒன்றான வெள்ளை நாவல் பழங்களை உண்ணுவதின் மூலம் இரத்தத்தில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட சிவப்பு அணுக்கள் அதிகரிக்கும். மற்றொரு நாவல் வகையான "சம்பு நாவல்" பழங்களை சாப்பிட்டால் பித்த மயக்கம், அதிக தாக உணர்ச்சி இவை பறந்தோடிவிடும்.

~ கீதாமணி

# சேஷாத்ரி சுவாமிகள்

இறைவன் ஈசனே மலையாய்த் தோன்றி, மண்ணுலக மாந்தர்களுக்கு அருள்புரிந்து வரும் புண்ணிய பூமி திருவண்ணாமலை என்னும் சீர்மிகு தலம்!
இதனை சித்தர்களின் சொர்க்கபூமி என்றும் ஆன்மீக அன்பர்கள் போற்றுவதுண்டு காரணம், ஞானமும் சித்தியும் முக்தியும் வேண்டி, அலைந்து திரியும் ஞான தபோதனரை தன்னகத்தே ஈர்த்து, வேண்டியன கொடுக்கின்ற வித்தையை இந்த பூமியில் சிவபெருமான் இன்றளவும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். இந்த பெருமைபெற்ற சிவத்தலத்தில் இறையருள் வாய்க்கப் பெற்று, அவனோடு கலந்த அடியவர்கள் எண்ணிலடங்கார்!




அவர்களில் ஒருவர் தான் சேஷாத்ரி சுவாமிகள். இவரது காலம் ஸ்ரீ ரமண மகரிஷிக்கும் சற்றே முற்பட்டது என்றால் அது மிகையாகாது! சேஷாத்ரி சுவாமிகளின் பிறப்பு, வளர்ப்பு, இறை ஈர்ப்பு, போன்றவற்றை இந்த சித்தர் பூமி, பகுதியில் காண்போம்.

காஞ்சியில் அருள்புரியும் காமாட்சி அம்மனை ஸ்ரீ வித்யா முறைப்படி வழிபாடு செய்ய ஸ்ரீ ஆதிசங்கரரால் ஏற்பாடு செய்யப்பட்ட தேவி பக்தர்களை காம கோடி வம்சம் என அழைத்தனர். அந்த வம்சத்தில் வந்தவர்கள் வரதராஜன் - மரகதாம்பாள் தம்பதியினர். உத்திரமேரூர் அருகில் உள்ள வாவூர் கிராமத்தில் வசித்து வந்த இந்த தம்பதியினருக்கு 1870 ம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ம் நாள் தோன்றிய ஞான அவதாரம் தான் நமது சுவாமிகள். சனிக்கிழமை பிறந்ததால் பெருமாளின் நினைவு விளங்க, சேஷாத்ரி எனப் பெயரிட்டனர்.
சிறுவயது முதலே இவரது கைப்பட்டதெல்லாம் கடவுளின் கருணையைப் பெற்றன. இவர் தொட்டது அனைத்தும் துலங்கியது. இந்த சிறு வயதில் இத்தனை சக்தியா? இவனிடம் இறைவனின் கருணை இழையோடுகிறது என அனைவரும் உணர்ந்தனர் அதனாலேயே, "தங்கக்கை" சேஷாத்ரி என அகமகிழ்ந்து புகழ்ந்தனர்.

அந்த சிறு வயதிலேயே வேதங்களை முறைப்படி கற்று, பலவித சாஸ்திரங்களில் பாண்டித்தியம் பெற்று ஆன்மீக ஒளியினை நிரம்பப் பெற்றவராக காட்சியளித்தார்.
இவருக்கு 14 வயது ஆன நேரத்தில் இவரது தந்தையார் இறந்துவிட, அதுமுதல் தாயின் அரவணைப்பிலே வளர்ந்தார்.
சுமார் 17 வயதிலேயே சாஸ்திரம், இதிகாசம், வேதங்களைக் கற்றுத் தேர்ந்ததால், இராமாயண பாகவத காலட்ஷேபங்களை செய்து, காண்போரை வியக்க வைத்தார், இந்த கர்ம ஞானி!

இந்த நேரத்தில் இவரது தாயார் சேஷாத்ரிக்கு திருமணம் செய்து வைக்க எண்ணம் கொண்டு, இவரது ஜாதகத்தை ஒரு ஜோதிடரிடம் காட்ட, அவர், "இந்த ஜாதகருக்கு சம்சார யோகமே கிடையாது! சன்னியாசி யோகம் தான் உள்ளது சன்னியாசியாய் வாழ்க்கையைத் தொடங்கி, பிறகு மகானாக பரிமளிக்கும் யோகம் அமோகமாக உள்ளது", என்று கூறினார்.

அப்போது தான் இவரது தாய்க்குப் புரிந்தது் தான் பெற்றெடுத்த மைந்தன் ஒரு மகான் என அறிந்த தாய், நெஞ்சு குளிர்ந்தார்.



திடீரென ஒரு நாள், அன்னை ஆதிபராசக்தி பாம்பின் வடிவாக தன் முதுகில் ஏறி, தன்னை ஆட்கொண்டதாக உணர்ந்தார். இது நடந்த சில நாட்களில் இவரது தாயாரும் இறந்து விட்டார்.

இறப்பதற்கு முன் சேஷாத்ரியை அழைத்த தாய், "பிறக்க முக்தி திருவாரூர், தரிசிக்க முத்தி சிதம்பரம், இறக்க முக்தி காசி, நினைக்க முக்தி திருவண்ணாமலை" என்ற பொருள்படும் சுலோகத்தை மூன்று முறை கூறி, "அருணாசலம்" என்ற சொல்லையும் மூன்று முறை கூறி மூன்று முறை இவரது நெஞ்சில் அடித்து சொல்லி விட்டு மகனுடைய மடியிலேயே தலை சாய்த்து இயற்கை எய்தினார்.

தாய் மறைந்த பின் அவர் கூறிய அருணாசல மந்திரமே அவரது அடிமனதில் ஆழமாய்ப் பதிந்தது!

அண்ணாமலையை மனதால் நினைத்து, அதை ஒரு காகிதத்தில் வரைந்து, அதையே பூஜை செய்து வந்தார்.

பூஜை செய்யத் தொடங்கிய நாள் முதல் உணவை மறந்தார் அன்றாடக் கடனான குளியலை மறந்தார்! அருணாசலத்தை மட்டுமே மறவாமல் இருந்தார். இவரைப் பார்த்தவர்கள் எல்லாரும் "ஞானாப் பைத்தியம்" என எள்ளி நகையாடினர்.

அனைத்தையும் துறந்து துறவியாகி, காஞ்சியை விடுத்து புறப்பட்டார். அந்த பொற்பாதங்கள் சென்றடைந்த தலம். அவரது மனதிலே அடித்தளமிட்ட அண்ணாமலை! ஆம்?...... ஒரு நன்னாளில் சேஷாத்ரி சுவாமிகளின் அருட்பாதங்கள் திருவண்ணாமலையை வந்தடைந்தன.

வந்த நாள் முதல் கிரிவலம் வருதலையே தலையாய கடமையாய் செய்து வந்தார். அண்ணாமலையாரின் ஆலயத்தில் நினைத்த இடத்தில் அமர்ந்து தியானம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அப்போது தான் அவரது சித்துகள் வெளிப்படத் தொடங்கியது.

திடீரென ஓடுவார், சிரிப்பார்.... அங்குமிங்கும் பார்ப்பார்! திடீரென ஓரிடத்தில் நின்று வானத்தை நோக்கி பேசுவார்! அழுக்கான உடை; அருளொளி வீசும் கண்கள் என அண்ணாமலைக்கே அணிசேர்க்க வந்தவராய் ஆச்சர்ய மூட்டினார்.

வணங்கி நிற்பவர் நல்லவர் என்றால் ஆசீர்வாதம் செய்வார் தீயவர் என்றால் திட்டித் தீர்த்து விடுவார்! இரவில் கூட கிரிவலம் வருவார் இல்லையேல் தியானம் செய்வார்!

அவரை மனதார நம்பி, வணங்கிய பலபேருக்கு மும்மூர்த்திகளாகவும், ஆதிபராசக்தியாகவும் காட்சி கொடுத்து மெய் சிலிர்க்க வைத்தார். நம் மகான்!

சிலரை அணைப்பர் அவர்கள் செல்வந்தராவர்! சிலரை கன்னத்தில் அறைவார் அவர்களின் கர்மவினை தீரும்! இப்படி, அவர் தொட்டதனால் தோஷம் தீர்ந்து சுகம் பெற்றவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது!

ரமண மகரிஷி தன் 16 வது வயதில் அப்போது புதர் மண்டிக் கிடந்த பாதாள லிங்கத்தை கட்டியணைத்தவாறு நிஷ்டையில் இருக்க, அந்திப்பட்ட நேரத்தில் அவ்வழியே வந்த சேஷாத்ரி சுவாமிகள், புதர் மண்டிய அந்த இடத்தில் ஏதோ ஒளி தெரிகிறதே என அங்கு சென்று பார்க்க, சதைகள் பாதி அரிக்கப்பட்ட நிலையில் ரண தேகத்தோடு இருந்த ரமணரை வெளியில் கொண்டு வந்து மருந்திட்டு, ரமண மகரிஷி என்று அவரை உலகமே போற்றும் வண்ணம் வெளிப்படுத்திய விவேகி சேஷாத்ரி சுவாமிகள் ஆவார்.

அதேபோல, வள்ளிமலை சுவாமிகள் தரிசனம் செய்ய வந்த போது, திருப்புகழ் தான் மந்திரம் என உபதேசம் அருளியவரும் நம் சேஷாத்ரி சுவாமிகள் தான்!

இவரது ஜீவசமாதி, கிரிவலப் பாதையில் செங்கம் ரோட்டில், மலையடிவாரத்தில் அமைந்து இன்னமும் இங்கு வரும் அன்பர்களுக்கு அருள் பாலித்து வருவதை உணர்ந்தவர்கள் அனேகம்!

இறுதி நாட்களில் இவரது முகத்தில் ஜீவ ஒளி அதி பிரகாசமாய் அலை மோதியது! இறுதி மூன்று நாட்கள் சிவசக்தி நிலையில் தியானம் செய்து 1929 ம் ஆண்டு ஜனவரி மாதம் முக்தி நிலையை எட்டினார்! பிறக்கும் போது இருந்த அதே கிரக நிலை, இவர் முக்தியடையும் போதும் இருந்தது தான் இதில் ஆன்மீக ஆச்சர்யம!

திருவண்ணாமலை சென்று அருணாசலத்தை வணங்கி, இந்த சேஷத்ரி சுவாமிகள் என்னும் ஆன்மீக ஜோதியையும் வணங்கி, உயர்வடைவோம்.

~ ரா. பன்னீர்செல்வம்




உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com

போன்: 88702 88701

# சக வருடம் பிறந்த கதை !

பஞ்சாங்கத்தில் இடம் பெறும் சக வருடம் என்பதின் முழு அமைப்பு சாலிவாகன ஆண்டு என்பது. நமது இந்திய அரசு கடைப்பிடிக்கும் சக வருடம் குறித்து ஒரு சுவையான செய்தி உள்ளது. நர்மதை ஆற்றுக்கு தெற்கே உள்ள பைடணபுரி என்ற சிற்றூரில் வாழ்ந்து வந்த மண் பாண்டம் தயாரிக்கும் குயவ இனத்தைச் சேர்ந்த ஒரு தொழிலாளியின் மகளுக்கும், நர்மதை ஆற்றுக்கு வடக்கே ஆட்சி புரிந்த நாகராஜன் என்ற மன்னனுக்கும் அவதரித்த புத்திரனாவான் சாலிவாகனன். இதன் பின்னணி ஒரு தற்செயல் சம்பவத்தால் நிகழ்ந்தது.

நீண்ட காலமாக புத்திரப்பேறு வாய்ப்புக்காக ஏங்கிக் கிடந்த மன்னன் நாகராஜனுக்கு ஒரு மகானின் தரிசனம் கிடைத்தது. அவர் தந்த ஆலோசனையை மதித்து மன்னன் நர்மதை நதிக் கரைக்குத் தெற்கே




உள்ள இடம் ஒன்றை அடைந்து, கயிலை உறை பரமேசுவரனைத் துதித்து கடும் தவமிருந்தான். அவனுடைய தவத்தை மெச்சி ஒருநாள் காட்சி தந்த ஈசுவரன் "இன்ன கிழமையில் இன்ன நேரத்தில் நீ மனைவியுடன் இன்பமாக இருந்தால் உனக்கு வீரம், விவேகம் கூடிய ஒரு குண சாலி புத்திரனாகப் பிறப்பான்" என்று அருளி விட்டு மறைந்து போனார்.

உடனே அங்கிருந்து வேகமாகப் புறப்பட்ட நாகராஜனுக்கு ஒரு சோதனை காத்திருந்தது. சில வினாடிகளுக்குள் பலத்த மழை ஆரம்பித்து மணிக்கணக்காக கொட்டிக் கொண்டே இருந்தது. இதன் விளைவாக, அவன் கடக்கவிருந்த நர்மதை ஆற்றில் பெரும் வெள்ளம் போகத் தொடங்கியது. இன்னும் சில மணி நேரத்தில் பரமேசுவரன் பிள்ளை வரம் பலிக்க கொடுத்த நேரம் வந்து விட்டது, கைக்கு கிடைத்தது வாய்க்கு கிட்டாத சூழ்நிலை குறித்து வருந்தினான் மன்னன்.
கொஞ்சதூரம் பயணப்பட்ட நாகராஜனின் கண்களில் ஒரு குடிசை தென்பட்டது, அவன் மழைக்கு அதில் ஒதுங்க நினைத்து குடிசையின் உள்ளே நுழைந்தான். அங்கே மண் பாண்டத் தொழிலாளியின் திருமணம் ஆகாத ஒரு இளம் பெண் அவனை மரியாதையுடன் உபசரித்து இருக்கை தந்தாள். அப்போது அவனுக்கு ஒரு யுக்தி தோன்றியது, அச்சமயம் ஈசுவரன் குறித்த நாள், கிழமை, நேரம் வந்துவிட்டதை அறிந்த மன்னன் அந்த இளம் பெண்ணிடம் தன் நிலமையைக் கூறி, அவள் சம்மதத்துடன், அவளை மணந்து உறவு கொண்டான், இதற்குள் வெள்ளம் வடிந்து பயணிக்க நல்ல சூழ்நிலை உருவாகி விட்டது. உடனே மன்னன் அந்த ஒரு நாள் மனைவியிடம் பிரியா விடை பெற்று தன்னாட்டுக்குப் புறப்பட்டு விட்டான். எதனாலோ அவன் திரும்ப அந்த திடீர் மனைவியை பார்க்க வரவே இல்லை.
நாட்கள் ஓட, இறைவன் அருளியபடி, புனித நன்னாளில் அரசருடன் தாம்பத்ய உறவு கொண்ட குயவன் மகளுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு சாலிவாகனன் என்று பெயரிடப்பட்டது.

சிறு பிராயம் முதலே அவன் சிறந்த புத்திசாலியாகவும், வீரனாகவும் இருந்தான். தன் வயதொத்த பையன்களோடு "ராஜ தர்பார்" விளையாட்டு நடத்தும் சாலிவாகனின் கைப் பொருள்கள் படைக்கும் திறனுங் கொண்டிருந்ததால் நிறைய குதிரைப் படை, யானைப் படை, தேர்ப்படை, காலாட் படை யென பல வகை உருவங்களை களி மண்ணால் உருவாக்கி, தன் கற்பனை அரசை தொடர்ந்து நடத்தி வந்தான்.

தான் ரதத்தின் மீது அமர்ந்து கொண்டு எதிரி நாட்டு அரசர்களுடன் போர் புரிவதாக பாவித்து நடிக்கையில், அவனுடைய தோழர்கள் மெய் மறந்து கைதட்டி ரசிப்பது தினசரி நிகழ்வானது.
சாலி வாகனன் அரசன் அல்லவா அவன் கற்பனைப்படி அவனுடைய விவேகம் அறிந்த ஊர் மக்கள் சிலர் சிக்கலான பிரச்சினைகளை அவனிடம் முறையிடுகையில், அதனை கூர்ந்து கேட்டு அளிக்கும் தீர்ப்புகள் நடுநிலையாகவே அமையும். எனவே அவனுடைய இத்திறமை அண்டை அயல் ஊராரையும் எட்டி விட, சாலி வாகனன் புகழ் பெற்றவனாகிவிட்டான்.
இளைஞனாகிவிட்ட சாலி வாகனன் திறமை, வீரம், நியாய உணர்வு, ஆகியவைகள் அவ்வூர் மன்னனான விக்கிரமார்க்கனை எட்டி விட்டது. இதனால் பொறுக்க முடியாத பொறாமை உணர்வை அடைந்த மன்னன் படை வீரன் ஒருவன் மூலம் சாலி வாகனனுக்கு செய்தி அனுப்பினான் இப்படி "சாலிவாகனா இக்கணமே இந்த நாட்டை விட்டு ஓடி விடு" என்று.
ஆனால், மன்னனின் கட்டளைக்கு கீழ்ப்படியாத சாலி வாகனன் அந்த படை வீரனிடம் "போ, போ! அரசனிடம் சொல்! சாலி வாகனன் இந்த பிறந்த நாட்டை விட்டு போகமாட்டான்" என சொல்லி திரும்பி அனுப்பினான்.
இதனால் சினமுற்ற விக்கிரமார்க்கன் பல வீரர்களை சாலி வாகனனின் இருப்பிடத்திற்கு அனுப்பி, அவனை நாட்டை விட்டு விரட்ட உத்தரவிட்டான். ஆனால் தனது பராக்கிரமத்தால் சாலி வாகனன் அவர்களையும் துரத்தி விட்டான்.

மீண்டும், மன்னரிடம் திரும்பிய படை வீரர்கள் சாலி வாகனனின் வீரத்தைப் பற்றி உயர்வாக கூறி, தங்கள் தோல்வியை ஒத்துக் கொண்டார்கள். இச்செய்கையால் அவமானமும், ரோஷமும் பெற்ற மன்னன் தானே தன் சேனைகளுக்கு தலைமை ஏற்று போரிட ஆயுத்தமாகி, கிளம்பிவிட்டான்.
விக்கிரமார்க்கன் பெரும்படையுடன் தன்னிருப்பிடம் வருவதை அறிந்து கொண்ட சாலி வாகனன், சிவபிரானிடம் உருக்கமாக பிராத்தனை செய்தான். அதன் விளைவாக அவனிடம் மனமிரங்கிய பரமேசுவரன் அருளால், சாலி வாகனன் இதுவரை சிறுபிராயம் முதல் களிமண்ணால் உருவாக்கியிருந்த எண்ணிக்கையற்ற, காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை வீரர்கள் உயிர் பெற்று எழுந்து விட்டனர்.
இத்தனை படைகளுடன் தன்னைத் தாக்க வந்த விக்கிரமார்க்கன் மற்றும் அவனுடைய பெரும்படையை எதிர்த்து வீரமாகப் போரிட்ட சாலி வாகனன் அவர்களை ஓட ஓட விரட்டியடித்தான். மிரண்டு போன மன்னனும், அவன் பரிவாரர்களும் பெரும் தோல்வி பெற்ற அவமானத்துடனும், உயிர் பயத்துடனும் புறமுதுகு காட்டி ஓடிப் போய் விட்டார்கள். இந்நாளை நினைவுபடுத்தும் வண்ணம் பெரும் படையை வெற்றி கொண்ட சாலி வாகனனைப் போற்றும் வகையில் சாலி வாகனன் எனும் சக ஆண்டாக, வருடத்திற்கு பெயர் சூட்டப்பட்டு, இன்றும் அது தொடர்கிறது.

சக ஆண்டின் தொடக்க தினம் என்ன தெரியுமா? ஒவ்வொரு வருடத்தின் மார்ச் மாதம் 22 ந்தேதி தான். அவ்வாண்டு லீப் வருடமானால் அந்த வருடம் மார்ச் 21 ம் தேதியே ஆரம்ப நாளாகிவிடும். சக ஆண்டில் இடம் பெறும் மாதங்களாக சைத்ரம், வைசாகம், ஜேஷ்டம், ஆஷாடம், ச்ராவணம், பாத்ரம், ஆஸ்வினம், கார்த்திகம், அக்ரஹாயனம், பௌஷம், மாகம், பால் குணம் என்ற பனிரெண்டு எண்ணிக்கையில் அமையும்.



பொதுவாக ஆங்கில ஆண்டுக்கு இணையான இம்மாதங்கள் ஒவ்வொரு வருடத்தின் மார்ச் 22 (லீப் வருடத்தில் மட்டும் (21 ம்) தேதி தொடங்கி அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ம் தேதி முடிவடையும். இந்த ஒவ்வொரு ஆண்டின் மாத நாட்களும், மாதங்கள் தொடங்கும் ஆங்கிலத் தேதிகளும் நிலையானவைகளே விதி விலக்கு லீப் ஆண்டில் மட்டுமே. கடவுளின் படைப்பில் மன்னன் - சாதாரண குடிமகன் என்ற அந்தஸ்து வேறுபாடு கிடையாது என்பதற்கு இந்த "சக ஆண்டு" ஒரு உதாரணமாகத் திகழ்கிறது எனவேதான் இந்திய அரசு இப்பெயரை ஏற்று கௌரவப்படுத்தியுள்ளது.

~ கீதாமணி




# அலைகளாடும் திருச்செந்தூர் முருகன் ஆலயம்

குமரவேள் என்கிற அருள்மிகு சுப்பிரமணியர் குடிகொண்ட திருக்கோயில் திருச்செந்தூர் தலத்தில் அமைந்துள்ளது.

அறுபடைத் தலங்கள் என்று போற்றப்படும் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்ச்சோலை இவற்றுள் திருச்செந்தூர் இரண்டாம் படைவீடாக விளங்குகிறது. அறுபடை வீடுகள் ஐந்தும் மலையுடன் சம்பந்தப்பட்டது. ஆனால் திருச்செந்தூரோ கடற்கரை மற்றும் சிறு குன்றுடன் தொடர்புடையதாக வித்தியாசமாக உள்ளது.



பல தொன்மையான புராண சம்பவங்கள், சரித்திர மற்றும் நிகழும் நூற்றாண்டில் விளைந்த அரிய சம்பவங்களையும் இத்தலம் கொண்டு சிறக்கிறது.

முத்துக்குளியல் நகரான தூத்துக்குடியிலிருந்து சுமார் 45 கீ.மீ தொலைவிலும், திருநெல்வேலியிலிருந்து சுமார் 88 கீ.மீ தூரத்திலும் திருச்செந்தூர் நகரமுள்ளது. சென்னை எழும்பூரிலிருந்தும், தூத்துக்குடி, நெல்லையிலிருந்தும் புகைவண்டிகள், பேருந்துகள், சிறப்பு பேருந்துகள், வாடகைக் கார் வசதிகள் நிறைய உண்டு.

மேலும் திருச்செந்தூர், மதுரை ஏர்போர்ட்டிலிருந்து சுமார் 172 கீ.மீ தூரத்திலும், தூத்துக்குடி விமான நிலையத்திலிருந்து சுமார் 40 கீ.மீ தூரத்திலும் உள்ளது.

பல்லாயிரக்கணக்கான வருட தொன்மை கொண்ட திருச்செந்தூருடன் அக்கால மகான்கள், தவ சீலர்கள், பாண்டிய மற்றும் நாயக்கர் வம்ச அரசர்களும் நிறையவே தொடர்புள்ளவராக இருக்கின்றனர். அக்காலத்தில் தமிழ்மா முனிவர் அகத்தியர் குமரவேளின் அருளைப் பெற்ற தலமாகவும், அசுரன் சூரபத்மனை அழிக்க வேண்டி, வியாழ பகவானாகிய குரு இத்தல செந்திலாண்டவனைக் குறித்து தவமிருந்த தலமாகவும், பன்னிரு சித்தர்களில் எட்டு சித்தர்கள் சமாதி கொண்டுள்ள தலமாகவும், தன்னை இங்கு வந்து வழிபட்டு நற்பலன்கள் பெற்ற ஆதி சங்கரர் முருகனைப் போற்றி அருளிய சுப்ரமண்ய புஜங்க நூலை படைத்த தலமாகவும்,

ஓரெழுத்தந்தாதி பதிற்றுப்பத்து யமக அந்தாதி உள்ளிட்ட பல புராதன நூற்களில் கொண்டாடப்படும் தலமாகவும் விளங்கும் திருச்செந்தூரில் எத்தனையோ சுவையான புராண சரித்திர சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. அவைகளில் ஒரு சில நிகழ்வுகளை அறிகையிலேயே நமக்கு பரவசம் தோன்றிவிடும்.

புராண காலத்தில் சூரபத்மன் எனும் கொடிய அரக்கன் வானுலகத் தேவர்களுக்கு பலவித

தொல்லைகள் தந்து அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக வாழ்ந்து வந்தான். ஒரு நிலையில் அந்த அசுரனின் தொல்லையை தாங்கமுடியாமல் தேவர்கள் சிவபிரானை நாடி முறையிட்டனர். உடனே சிவனார் தனது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு அக்னி பொறிகளை புறப்படச் செய்தார். அப்பொறிகள் அக்கணமே ஒன்று திரண்ட ஒளியைக் கூட, அதிலிருந்து அவதாரமானார் ஆறுமுகனாகிய முருகவேள். அங்கிருந்த அன்னை பார்வதி தன் பாதச் சிலம்பிலிருந்து 9 மணிகளை சிதறவிட்டவுடன், அதிலிருந்து வீரபாகு தேவர், வீரகேசரி, வீர மார்த்தாண்டர், வீர மகேசுவரர், வீர நந்தகர், வீர மகேந்திரன் என்ற நவ வீரர்கள் தோன்றி, இறைவி ஆணைப்படி கந்தவேள் நடத்தப்போகும் சூரபத்ம போருக்கு தயாராக நின்றார்கள்.

முன்பே தான் இறைவனிடம் பெற்ற அரிய வரங்களால் தன்னை அழிக்க எவருமில்லை என அகந்தை கொண்டு வானோர்களுக்கு இம்சைகள் தந்து வந்த சூரபத்மனை அழிக்க அமைக்கப்பட்ட பெரும்படையின் தலைவன் ஆனார் ஆறுமுகனார்.
சூரபத்மனுடன் நடக்கும் பெரும் போரைத் துவக்கினார் முருகவேள். தன்னை எதிர்ப்பவரின் பலம் அறியாத அந்த அசுரன் அவருடன் கடுமையாக மோதினான். அதன் விளைவாக சூரபத்மனோடு சேர்ந்து ஒரு பெரிய அரக்கர் கூட்டமே அழிந்தது. முருகனுக்கு எதிரியாக அப்போது தோன்றிய கிரௌஞ்ச மாலையையும் பொடிப்பொடியாக்கினார் சிவமைந்தன்.
இந்த போர் நடக்கும்போது, முருகன் களைப்புற்ற தன் படைவீரர்கள் ஓய்வு எடுக்க அமைத்து தந்த இடமே இன்றைய திருச்செந்தூர் உள்ள பகுதி.

சூரபத்மன் அழிந்த செய்தியால் ஆனந்தமுற்ற குருபகவான் தேவதச்சனாகிய மயனை வரவழைத்து திருச்செந்தூரில் செந்தூரான் குடிகொள்ள ஒரு அழகான திருக்கோயில் கட்டக் காரணமானார். குருபகவான் தன்னை வேண்டிக் கொண்டவாறு, முருகன் அதிலே எழுந்தருள இசைந்தார். சூரபத்மனை அழித்த கையோடு அந்த அசுரனைக் கொன்றதால் உண்டான பாவம் தொலைய, முருகப்பிரான் இத்தலத்திலேயே தக்க வழிபாடு மேற்கொண்டார் என்று தலபுராணம் மூலம் அறிய முடிகிறது.
மன்னர் திருமலைநாயக்கர் தமிழகத்தை ஆண்டபோது அவருடைய பிரதிநிதியாக நெல்லைச் சீமையை ஆட்சி செய்து வந்தார் வடமலையப்பபிள்ளை என்பவர். அந்த கால கட்டத்தில் திருச்செந்தூர் ஆலய உடைமைகளை கொள்ளையடிக்க டச்சுக்காரர்கள் பெரும் படையுடன் வந்துவிட்டனர்.அவர்களை பலமாக எதிர்க்க நாயக்க படைகள் போராடியும் வெற்றி பெற முடியவில்லை.
டச்சுக்காரர்கள் ஜெயித்த திமிருடன் திருச்செந்தூர் கோயிலுள் உட்புகுந்து, அங்குள்ள பொக்கிஷங்களை கொள்ளையடித்து வைர, தங்க, வெள்ளி ஆபரணங்கள், பூஜை பாத்திரங்கள், ஏராள பொன் நாணயங்கள் இவற்றை மூட்டை கட்டியதோடல்லாமல் தொன்மை பொருந்திய சிற்பங்கள், ஓவியங்கள் பலவற்றை சின்னாபின்னமாக்கிவிட்டனர். தவிர அரிய சண்முகனார், விக்கிரகத்தையும் தங்களுடன் எடுத்து கொண்டனர். டச்சுக்காரர்கள் ஒரு பெரும் படகில் கொள்ளைப் பொருட்களை ஏற்றி, இலங்கையை நோக்கி பயணிக்க ஆரம்பித்தபோது, இறையருளாக பெரும் சூறாவளி வீசி கடல் கொந்தளிக்க ஆரம்பித்து விட்டது. இதற்கு காரணம் அந்த சண்முகர் விக்கிரகம் தான் என தீர்மானித்த டச்சுப் படைத் தலைவன், அதனை பிறர் உதவியோடு கடலில் வீசியெறிந்துவிட்டான். இறை

பூஜைக்கு சிலை இல்லையே என கவலைப் பட்டுக்கொண்டிருந்த வடமலைப்பிள்ளையின் கனவில் முருகன் தோன்றி "எம் திரு உரு கடலுள் உள்ளது. அதனை மீட்கவும்" என அருளி, அச்சிலையிருந்த பகுதியை தெரிந்து கொள்ளும்படி சில அடையாளங்களையும் அருளினார். உடனே செயல்பட்டு படைவீரர்களின் துணையுடன் சண்முகனார் சிலையை கடலிலிருந்து மீட்டுக் கொண்டு வந்தார் வடமலையப்பபிள்ளை. பின்பு அத்திரு உரு கி.பி 1653 ஆம் ஆண்டு தை மாத 29 ம் தேதி கூடிய வெள்ளிக்கிழமையன்று மீண்டும் பிரதிஷ்டையானது. இச்செய்தியை இக்கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

திருச்செந்தூர் கோயிலில் வேறு சில கல்வெட்டுகளும் காணப்பெற்றுள்ளன. அவைகள் மூலம் அறிய முடிந்த செய்திகளை அறியலாம்.



இவ்வாலயத்தில் உள்ள பிரசித்தி பெற்ற வள்ளிக் குகையில் உள்ள 17 ம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றின் மூலமும், ஒரு பலகை அளவு கல்வெட்டு மூலமும் முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன.

வள்ளிக்குகையில் நுழைந்தவுடன் குடைவரை வழியில் 441 . 2 உயரமும், 11 .1 அடி உயரமும் கொண்ட பலகை கல்வெட்டில் உள்ள 34 வரிகளும் அக்காலத் தமிழில் செதுக்கப்பட்டுள்ளன. அதன் வழியாக மன்னன் திருமலைநாயக்கர் வள்ளிக்குகையின் வெளிப்புறம் தினசரி வழிபாட்டுக்காக ஒரு கிணறை வெட்டியுள்ளார் என்பது புலனாகிறது.

கி.பி. 1648 ம் ஆண்டில் டச்சுக் கொள்ளையர்களால் பலவாறு சீரழிந்து போன இக்கோயிலை சீர் செய்யும் பணிகளை கி.பி. 1656 ம் ஆண்டு திருமலை நாயக்கர் மேற்கொண்டார் என்பதை வேறொரு கல்வெட்டு சொல்கிறது.

இந்த முருகன் திருக்கோயில் பற்றி திருவாவடுதுறை ஆதீனத்தின் வசமுள்ள ஐந்து செப்பேடுகள் அளிக்கும் செய்தி வாயிலாக, இத்தல ஆலய மேலக் கோபுரப் பணிகள் கி.பி. 1779 ம் ஆண்டில் திருவாவடுதுறை ஆதீனமும், பாஞ்சாலங்குறிச்சி மன்னன் ஜெகவீரபாண்டிய கட்டபொம்மனும் இணைந்து செயல்பட்டு முடித்ததை அறிய முடிகிறது.

மேலக் கோபுரம் 5ம் தளத்தில் மரத்தாலான நிலைப்படியில் காணப்படும் கி.பி கொல்லம் ஆண்டு கல்வெட்டு எழுத்துப் பொறுப்பு எனும் ஆலயம் இங்குள்ளதை எடுத்துக் காட்டுகிறது.

இப்படி பல செய்திகளை அறிவிக்கும் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு தமிழக அரசால் படியெடுக்கப்பட்டுள்ளன.

இனி இத்திருக்கோயில் அமைப்பு, மற்றும் பல சிறப்புகளை அறிவோம்.

மருதமும் நெய்தலும் மயங்கிய திரு ஊர் திருச்செந்தூர் என கடைச்சங்க புலவர் ஒருவர் அகநானூறு நூலில் வர்ணித்துக் கூறிய இத்தலத்தில் முருகன் ஆலயம் ஒன்பது கோபுரத் திருவாயில்கள், மூன்று அகலப் பிரகாரங்கள், 24 புண்ணிய தீர்த்தங்கள் கொண்டு திகழும்.

கடல் அலைகள் தவழும் கடல் மணல் பரப்பைத் தாண்டி கண்ணுக்கு புலப்படாத சந்தன மலைகளால் இவ்வூர் கொண்ட வேறு பெயர் கந்த மதன பர்வதம் ஆகும்.
புனித காயத்ரீ மந்திரத்தின் 24 எழுத்துக்களைக் குறிக்கும் விதமாகவே இங்கே 24 தீர்த்தங்கள் உள்ளன. ஒவ்வொரு தீர்த்தமும் தனித்தனி மகிமையைக் கொண்டுள்ளது.
இவைகளில் தலையாய தீர்த்தமாக இருப்பது இத்திருக்கோயில் மற்றும் கடற்கரை சமீபமுள்ள கந்தபுஷ்கரணி தீர்த்தமென்கிற சிறிய வடிவு கொண்ட நாழிக்கிணறு, ஒரு சமயம் சூரபத்மனை வெற்றி கொள்ள கந்தவேள் இங்கு படையுடன் வந்த போது, வீரர்களின் தாகம் தீர்க்க தன் வேல் கொண்டு உருவாக்கிய புனித கிணறு இது. என்றும் வற்றாத இக்கிணற்றின் நீர் சமுத்திரம் அருகில் இருந்தும் உப்புச் சுவைக்குப் பதில் இனிப்பு சுவையைக் கொண்டுள்ளது.
இங்கு கோயிலில் முருகன் தரிசனம் பெற வரும் பக்தர்கள் முதலில் கடலில் நீராடிவிட்டு பின்பு நாழிக்கிணறு  வந்து, அதில் உள்ள நீரை பாத்திரத்தில் எடுத்து குளித்துவிட்டே ஆலயத்திற்குள் நுழைவார்கள்.

மனிதர்கள் கொண்ட அனைத்து தோஷங்களும், பற்றியுள்ள நோய்களும் இந்த ஸ்நானத்தால் நீங்கப் பெறுவர் என தலபுராணம் கூறும் செய்தியால் தெரிந்து கொள்ள முடிகிறது.
முருகப்பிரான் குடிகொண்ட இக்கோயிலின், அவர் குடிகொண்ட மேற்கு திசையில் 137 அடி உயரமும் 9 நிலைகளும் கொண்ட மேல ராஜகோபுரம் பல சிற்ப நேர்த்திகளுடன் வியந்து அண்ணாந்து பார்க்க வைக்கிறது. 300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இதன் கட்டட அமைப்பில் ஒவ்வொரு நிலையுமே அழகான சிற்பங்கள் கொண்டு கவர்கிறது. இந்த ராஜகோபுரம் வாயில் எப்போதும் சார்த்தப்பட்டே இருக்கும். விதிவிலக்காக தெய்வானை திருமண விழா நாளென்று மட்டுமே திறக்கப்படும் வழக்கமுள்ளது.
நல்ல உயரமுள்ள அழகான கொடிமரங்கொண்ட இவ்வாலயத்தில் தரிசனம் பெறுமுன்னர், அதன் அருகில் தனித்துக் கோயில் கொண்ட தூண்டுகை விநாயகரின் தரிசனம், ஆசிகளைப் பெற்று நுழைய வேண்டும்.
தெற்கு நோக்கிய, கோபுரமற்ற வாசல் வழியே செல்கையில் நம்மை வரவேற்பது 120 அடி நீளமும், 86 அடி அகலமும் கொண்ட, சிற்ப திறன்களை வெளிப்படுத்தும் தூண்கள், ஆங்காங்கே இந்த சண்முக விலாச பெரிய மண்டபத்தில் எழுந்தருளி திருக்காட்சி தருகிறார்.
திருச்செந்தூர் ஆலய முதல் மூலவ மூர்த்தியான அருள்மிகு பால சுப்பிரமணியர் எனும் செந்திலாண்டவன் அர்த்த மண்டபம் தாண்டி உள்ள அகன்ற கருவறையில் அருள் சுரக்கும் வதனம் பூண்டு, நான்கு திருக் கரங்கள் காட்டி நின்ற நிலை காட்சி அருள்கிறார். இம்மூலவர் தவக்கோலத்தில் இருப்பதாக ஐதீகமுள்ளது. வழக்கமாக வீரவேலும், தேவிமார்களும் கருவறையில் இல்லை.
இம்மூர்த்திக்கு குமார தந்திர முறையில் பூஜை நடைபெற, மற்றொரு மூர்த்தியான சண்முகருக்கு சிவாகம முறையில் பூஜை நடைபெறுகிறது.

செந்திலாண்டவன் கருவறையின் பின்புறத்தில் 5 லிங்கங்களும், கருவறை உள்ளே மூன்று லிங்கங்களும் குடி கொண்டுள்ளனர். அஷ்ட லிங்கங்கள் என்ற பெயர் கொண்டவை இவை.
இந்த மூர்த்தி குடிகொண்ட சந்நிதியின் பின்புறம் உள்ள பாம்பாறை என்ற பெயர் கொண்ட சிறிய

குகையில் வரிசையாக 5 லிங்கங்கள் குடிகொண்டுள்ளன. முருகப்பிரான் எந்நேரமும், இந்த லிங்கங்களை பூஜிப்பதாக தல புராணம் எடுத்தியம்புகிறது.

அருள்மிகு சுப்பிரமணியன் தேவிமார்களான ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தேவசேனா ஆகியோர் ஆலய சுற்றுகளில் தனித்தனியே, பளிங்கு கற்கள் பதித்த மண்டபத்தில் எழுந்தருளி அருட்காட்சி வழங்குகிறார்கள்.

தவிர இக்கோயிலின் உள்ளே அமைந்த பிரகாரங்களில் சித்தி விநாயகர் குமார விடங்கர், சண்முகர், 63 நாயன்மார்கள், சக்கரம் ஏந்தாத திருப்பதி வெங்கடாசலபதி பூதேவி. ஸ்ரீ தேவி நீளா தேவி சமேத ஸ்ரீ ரங்கநாதர், சங்கரநாராயணர், விசாலாட்சி வேதபுரிசுவரர் சகஸ்ரலிங்கம், தட்சிணார்த்தி, 108 சிவலிங்கங்கள், சண்முகர், சூரசம்ஹார மூர்த்தி மற்றும் இதர பரிவார தேவதைகள் எழுந்தருளி பக்தர்களை ஆசிர்வதிக்கிறார்கள்.

செந்திலாண்டவன் இத்தலத்தில் ஞான குருவாக திகழ்வதால் ஆலயத்தில் நவக்கிரக சன்னிதி கிடையாது.

செந்திலாண்டவனை தரிசித்துவிட்டு வரும் பக்தர்களுக்கு இக்கோயிலில் பன்னீர் இலையில் வைத்து விபூதி பிரசாதம் அளிக்கப்படுகிறது. இதனை நெற்றியில் இட்டுக் கொள்வோர் கொண்ட வலிப்பு, ஜுரம், குடல்புண் உள்ளிட்ட வியாதிகள் குணமாவதாக நம்பிக்கை பேச்சுத் திறன் அற்றோர் ஏதேனும் நோய் பாதித்ததால் உண்டான பேச்சுத் திறன் குறைந்தோருக்கு இங்கு விசேட பூஜை செய்து இலைப் பிரசாத விபூதி தரப்படுகிறது.

அதனை அவர்கள் உட்கொள்ள தக்க நிவாரணம் படிப்படியாக அத்தகையோருக்கு கிடைத்துவிடும் என்று சொல்லப்படுகிறது.




கடந்த 2014 ம் ஆண்டு டிசம்பர் 26 ம் தேதி மிக கடுமையான சுனாமி என்று பெயர்கொண்ட சூறாவளி தமிழகத்தின் பல பாகங்களில் தாக்கி நாசமாக்கியது.

அதுதவிர கடற்கரையோர பாகங்களில் கடல்நீர் பொங்கி கரைத்தாண்டி ஊர்களுக்குள் நுழைந்து பல உயிர்ச் சேதங்கள், உடமைச் சேதங்கள் விளைவித்து விட்டது.

ஆனால், கடலில் மிக அருகில் இருந்த இந்த முருகன் ஆலயம் பக்கம் கூட கடல் நீர் கரையை தாண்டாததோடு மட்டுமல்லாமல், சுமார் 200 கி.மீ தூரம் கரையை விட்டு உள்வாங்கிய அதிசயமும் நிகழ்ந்துள்ளது.

எல்லா மாதங்களிலுமே செந்தூரன் திருக்கோயில் விழாக்கோலம் பூண்டு காட்சி தந்தாலும், இங்கு ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, மார்கழி, தை, மாசி மாதங்களில் இடம் பெறும் உற்சவங்கள் முக்கியமானவைகளாக உள்ளன.

வைகாசி விசாகத் திருவிழாவும், சில தினங்கள் தொடர்ந்து நடைபெறும் கந்த ஷஷ்டி விழாவும்,

ஆவணி மாத தேரோட்ட விழாவும் குறிப்பிடத்தக்கவை.

இக்கோயிலின் சமீபமுள்ள கடற்கரை அருகில் ஆண்டு தோறும் நடக்கும் சூரபத்மன் தலையை முருகன் வீழ்த்தும் போர் நிகழ்ச்சி நீண்ட நேரம் நடத்தப்படும், அப்போது உலகெங்கிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்களும், வெளிநாட்டு பல பார்வையாளர்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

இங்கு ஆவணி மாத விழா தேரோட்டத்தின் போதும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் திரண்டு அவ்விழாவை மகிழ்ச்சியாக கொண்டாடி வருகின்றனர்.

தினசரி இந்த ஆலயத்தில் ஒன்பது கால பூஜைகள் நிகழ்த்தப்படுகின்றன.

காலை 5 .10 முதல் இரவு 9 மணி ஆலய நடை சார்த்தப்படும் காலம் வரை பக்தர்கள் தொடர்ந்து இடைவேளையின்றி தரிசனம் பெறலாம்.

திருச்செந்தூர் ஆலய தேவஸ்தானம் பக்தர்கள் வசதியாக தங்க, பல குளிர்சாதன மற்றும் அது இல்லாத அறைகள் கொண்ட கட்டிடங்களை கட்டி, அதற்கான வாடகைக் கட்டணத்தையும் நிர்ணயித்துள்ளார்கள்.

நேரில் சென்றோ, தொலைபேசி மூலமாகவோ அல்லது ஆன்லைன் புக்கிங் மூலமோ அறைகளை கட்டணமுடன் பெறலாம்.

~ ஆரூர். ஆர். சுப்பிரமணியன்
துணை கலெக்டர் (ஓய்வு)



Special Birthday Ritual Packages for You
Get 40% OFF
Call: 88702 88701

# மேஷம் ஜுன் 16 – 30 ராசி பலன் 2021

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்

## மேஷம்



- இந்த மாதம் குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும். நீங்கள் புத்திசாலித்தனமாக செயல்பட்டு அவற்றை சமாளிப்பீர்கள்.
- திருமணமான அன்பர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்கி அவர்களுடன் கலந்து உறவாடுவதன் மூலம் உறவு வலுப்படும்.
- நண்பர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். நல்ல மனிதர்களின் நட்பு மூலம் உத்தியோகத்தில் ஆதாயங்களைப் பெறுவீர்கள்.
- உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. கவனம் தேவை.
- இந்த மாதம் உங்கள் பொருளாதாரம் நம்பிக்கை தரும் வகையில் இருக்கும்.
- பள்ளிக் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு இந்த மாதம் சிறப்பான மாதமாக இருக்கும். விடாமுயற்சியுடன் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.

## ரிஷபம்



- திருமணமான தம்பதிகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. குழந்தைகளுடனான உறவு வலுப்படும்.
- உத்தியோகம் செய்யும் இடத்தில் சில போட்டிகள் காணப்படும். நீங்கள் உங்கள் போட்டியாளர்களை சமாளித்து உத்தியோகத்தில் வெற்றி பெறுவீர்கள்.
- தொழிலில் லாபம் அதிகரிக்கும். புதிய தொழில் முதலீடுகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை.
- இந்த மாதம் பணப் புழக்கம் நன்றாக இருக்கும். தொழிலில் தன வருவாய் கணிசமாக உயரும். பளைய கடன்கள் எல்லாம் அடைபடும்.
- மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். உயர்கல்வி மாணவர்கள் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் அறிவுரைகளை கேட்டு நடந்தால் வெற்றி பெறலாம்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் என்றாலும் வயிறு மற்றும் குடல் சம்மந்தப்பட்ட உடல் உபாதைகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளது. உணவு கட்டுப்பாடு விசையத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

# மிதுனம்



- திருமணமான அன்பர்கள் தங்கள் துணையுடன் நல்லுறவு பேணுவார்கள். வாழ்க்கை துணைக்காக நேரம் ஒதுக்குவது அவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.
- சென்ற மாதத்தை விட இந்த மாதம் பண வரவு சற்று அதிகமாக இருக்கும். என்றாலும் நீங்கள் கடன் வாங்கக்ககூடிய வாய்ப்பும் உள்ளது.
- உத்தியோகத்தை பொருத்தவரை கல்வித் துறை மற்றும் அரசுத் துறையில் பணி புரிபவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும்.
- இந்த மாதம் தொழிலில் சிறிது பதட்ட நிலை இருக்கும். வெளிநாட்டுத் தொடர்புடன் தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக பண வரவைக் காண்பார்கள்.
- சுயதொழில் செய்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள்.
- ஆராய்ச்சி கல்வி படிக்கும் மாணவர்கள் அதிக கவனத்துடன் அதிக நேரம் படிக்க நேரும் என்பதால் தங்கள் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.
- ஆரோகியத்தில் கவனம் தேவை. சிறு நீரகம் சம்மந்தப்பட்ட உடல் உபாதைகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளது. போதுமான அளவு தண்ணீர் அருந்துவது உடல் நலத்திற்கு நன்மை பயக்கும்.

# கடகம்



- திருமணத்திற்குக் காத்திருக்கும் உங்களுக்கு ஏற்ற வாழ்க்கை துணை கிடைக்கப் பெறுவீர்கள். திருமணமான தம்பதிகளுக்கு மாதத்தின் முற்பகுதி யை விட பிற்பகுதியில் நல்லுறவு காணப்படும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் கூடிய சிறப்பான வேலை கிடைக்கிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது.
- சுயதொழில் சம்மந்தமாக குடும்பத்தில் இருக்கும் மூத்தவர்களின் ஆலோசனை கேட்டு நடப்பது உங்களுக்கு சாதகமான பலன்களை கொடுக்கும்.
- உங்களுடைய பொருளாதார நிலை சீராக இருக்கும். இந்த மாதம் யூக வணிகமான பிட் காயின் மற்றும் போரெக்ஸ் டிரேடிங் முதலீடுகள் மூலம் நல்ல லாபங்களை எதிர்பார்க்கலாம்.
- இந்த மாதம் மாணவர்கள் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டு படிப்பில் வெற்றி காண்பார்கள். ஆசிரியர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களைப் பின் பற்றி முன்னேற்றம் காண்பார்கள்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அதே நேரத்தில் அதிக பணிகள் கராணமாக தலைவலி, மற்றும் தூக்கமின்மை போன்ற பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மற்றும் உடற்பயிற்சி மூலம் மனம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

# சிம்மம்



- குடும்பத்தில் சில சிறு சிறு பிரச்சினைகள் இருந்தாலும் கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும். தாய் மற்றும் தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை.
- வேலை செய்யும் இடத்தில் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உங்களின் கடினமான உழைப்பு மேலதிகாரிகளிடம் உங்கள் வேலைக்கு உரிய அங்கீகாரத்தை பெற்று தரும்.
- கூட்டுத்தொழில் சார்ந்த முதலீடுகளில் வீட்டில் உள்ள பெரியவர்களின் ஆலோசனையை கேட்டு நடப்பது நன்மை பயக்கும்.
- பங்கு மற்றும் பொருள் வர்த்தகம் மூலம் அதிக லாபங்களை அளிக்கும் மாதமாக இருக்கும்.
- கொடுத்த கடன் வசூல் ஆவதில் சில பிரச்சனைகள் ஏற்படலாம்.
- இந்த மாதம் மாணவர்களின் கிரகிக்கும் திறன் அதிகரித்து காணப்படும் அதன் மூலம் கல்வியில் பிரகாசிப்பார்கள்.
- வெளிநாட்டில் கல்வி பயிலும் மாணவர்கள் சிறப்பாகக் கல்வி பயின்று வெற்றி காண்பார்கள்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக்கொள்ள நடைபயிற்சி மற்றும் மூச்சு பயிற்சி போன்றவற்றை மேற்கொள்ளுவது நன்மை பயக்கும்.

# கன்னி



- திருமணமான தம்பதிகளுக்கு இடையே நல்லுறவு காணப்படும். உங்கள் வாழ்க்கைத் துணையுடன் அதிக நேரம் செலவழிப்பது நன்மை பயக்கும்.
  - உத்தியோகத்தில் உள்ளவர்கள் எதிர்கால திட்டம் குறித்து உங்கள்

மேலதிகாரிகளுடன் கலந்து ஆலோசிப்பீர்கள். இந்த மாதம் அலுவலகத்தில் நல்ல பெயர் கிடைக்கும்.

- தொழில் சார்ந்த பயணங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கும். ஏற்றுமதி தொழில் புரிபவர்களுக்கு சுமாரான லாபம் கிடைக்கும்.
- மருத்துவ துறையில் தொழில் செய்பவர்கள் இந்த மாதம் சிறந்த பலன்களைக் காண்பார்கள். நிதிநிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் அதிக லாபங்களை அள்ளித்தரும் மாதமாக இருக்கும்.
- புதிய தொழிலில் முதலீடுகள் ஏற்றம் கொடுக்கும்.
- கொடுத்த கடன் வசூல் ஆவதில் சில பிரச்சனைகள் ஏற்படலாம்.
- மாணவர்கள் இந்த மாதம் திறம்பட செயல்படுவார்கள். ஆசிரியர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள் மூலமாக படிப்பில் முன்னேற்றம் காண்பார்கள்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் என்றாலும் அதிக பணி சுமை கராணமாக முதுகு வலி, மூட்டு வலி போன்றவை ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்க உடற்பயிற்சியை மேற்கொள்ளுவது நன்மை பயக்கும்.

# துலாம்



- திருமணமான தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து உண்மையாகவும் அனுசரணையாகவும் நடந்து கொள்வார்கள்.
- உத்தியோகம் செய்யும் இடத்தில் சாதகமான சூழ்நிலை இருக்கும். பணி செய்யும் இடத்தில் மேலதிகாரியின் பாராட்டுதலை பெறுவீர்கள்.
- அச்சுத் துறை, வணிகம், ஐடி போன்ற துறைகளில் இருந்தால் பணியில் பதட்டமான நிலை இருக்கும்.
- சுயதொழில் செய்பவர்கள் கடினமான உழைப்பிற்குப் பின் வருமானம் ஈட்டவேண்டியது வரும். நிதிநிலை கட்டுக்குள் இருக்கும்.
- கடன் மற்றும் பணம் சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் யாவும் சீராகும். புதிய கடன் எதுவும் இந்த மாதம் வாங்கும் எண்ணம் இருந்தால் அதனை தவிரப்பது நல்லது.
- விவசாய நிலம் அல்லது வண்டி வானகங்கள் வாங்கும் வாய்ப்பு உள்ளது.
- உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். படிப்பு முடிக்கும் தறுவாயில் இருக்கும் மாணவர்களுக்கு இந்த மாதம் வேலை வாய்ப்பு கிட்டும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் ஏற்ற இறக்க நிலை இருக்கும். சிறிது உடல் உபாதைகள் உங்களை வருத்தினாலும் நீங்கள் சமாளித்து முன்னேறுவீர்கள்.

# விருச்சிகம்



- குடும்ப உறவுகளிடம் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. வாக்கு வாதத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும்.
- உத்தியோகத்தில் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருக்கும்.
- தொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவார்கள்.
- கூட்டுத்தொழிலில் புதிய வாடிக்கையாளர்களைப் பெறும் வாய்ப்புகள் அதிகம். தொழில் மூலம் லாபமும் பெறுவீர்கள்.
- பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு சற்றே அனுகூலமான நிலை இருக்கும். இந்தமாதம் பணப் புழக்கம் சற்று மந்தமாக இருக்கும். உங்கள் செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள். தேர்வுகளை சிறப்பாக எழுதி நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வயதானவர்கள் சிறிது கவனமாக இருக்க வேண்டும்.

# தனுசு



- கணவன் மனைவிக்கு இடையே சிறிய விஷயங்களுக்கெல்லாம் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். எனவே வாழ்க்கைத் துணையிடத்தில் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. மனம் விட்டுப் பேசுவதன் மூலம் கணவன் மனைவி உறவில் ஒற்றுமை கூடும்.
- வேலை தேடிகொண்டிருப்பவர்களுக்கு புதிய வாய்ப்புகளை கொடுக்கும் மிகவும் உன்னதமான மாதமாக இந்த மாதம் அமைகிறது.
- மாணவர்கள் தங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பது சிறிது கடினமாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.
- சட்டம் மற்றும் மருத்துவ படிப்பு படிக்கும் மாணவர்கள் இந்த மாதம் சிறப்பாக கல்வி பயில்வார்கள்.
- இந்த மாதம் ஆரோக்கியத்தை பொருத்தவரை மனபதட்டம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.
- வீட்டிலும், அலுவலகத்திலும் அதிக பணிகள் காரணமாக உங்கள் உடல் நிலை பாதிக்கப்படும். ஆரோக்கியம் மேம்பட தியானம் மற்றும் நடைபயிற்சியை மேற்கொள்வது நன்மையக்கும்.

# மகரம்



- திருமணமான தம்பதிகள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்க இயலாத காரணத்தால் உறவில் அதிருப்தியும் மகிழ்ச்சியின்மையும் இருக்கும்.
- உங்கள் குடும்பத்திற்கென நேரம் ஒதுக்கி அவர்களுடன் கலந்து உறவாடுவதன் மூலம் உங்கள் உறவு மேம்படும்.
- உத்தியோகத்தை பொறுத்தவரை முன்னேற்றத்தில் மந்த நிலை இருக்கும். இது உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும். கடினமாக உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைப்பது அரிதாக இருக்கும்.
- சட்டம் மற்றும் எழுத்துத் துறையில் இருப்பவர்கள் இந்த மாதம் கணிசமாக பணம் சம்பாதிப்பார்கள்.
- தொழிலில் ஸ்திரமான நிதிநிலை இருக்கும். பெரிய அளவில் நஷ்டங்கள் ஏதும் ஏற்படாது என்பது உங்களுக்கு ஆறுதலான விஷயமாக இருக்கும்.
- உங்கள் சேமிப்பைக் கொண்டு உங்கள் செலவுகளை சமாளித்துக் கொள்வீர்கள்.
- தொழில் சார்ந்த கல்வியில் போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள் சிறந்த வெற்றி காண்பார்கள்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்க வாய்ப்பில்லை. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உங்கள் ஆரோக்கியம் குறித்த செலவுகள் எழும் என்பதால் அதற்கு சிறிது பணத்தை நீங்கள் ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

# கும்பம்



- திருமணமான தம்பதிகளின் தாம்பத்திய வாழ்வு சிறக்கும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை நிலவும். அன்னியோன்யம் பெருகும்.
- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும். இது தங்களின்களின் மன மகிழ்ச்சியை கூட்டும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள்  அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவார்கள்.
- சுயதொழில் மேற்கொள்பவர்கள் பெரிய அளவிலான வாடிக்கையாளர்களைப் பெறுவீர்கள்.
- வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும். இந்த மாதம்  நீங்கள் கடினமான முயற்சிகள் எடுப்பதன் மூலம் உங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள இயலும்.
- இந்த மாத மத்தியில் மாணவர்கள் சில பிரச்சினைகளை சந்திப்பார்கள். ஆனால் படிப்படியாக முன்னேற்றம் கிட்டும். மாணவர்கள் கவனம் சிதறாமல் கல்வி பயில வேண்டும்.  கவனமாக படித்தால் வெற்றி நிச்சயம்.
- உங்கள் நோய் எதிர்ப்புத் திறன் அதிகரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.  தினமும் உடற்பயிற்சி மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் தக்க வைத்துக் கொள்ளலாம்.

# மீனம்



- திருமணமான தம்பதிகள் இடையே சுமுகமான உறவு இருக்கும்.
- தங்களின் உத்தியோகத்தில் சாதனைகளைப் புரிவதற்கு வாய்ப்பு உள்ளது. பணியிடச் சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்
- சுயதொழில் செய்பவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவார்கள். வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும்.
- ஏற்றுமதி தொழிலில்  நீங்கள் சாதகமான விஷயங்களை எதிர்பார்க்கலாம்.
- கூட்டுத்தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்.
- இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.
- பங்கு வத்தக நிறுவனங்களில் முதலீடு செய்வதர்க்கும் லாபங்களை ஈட்டுவதற்கும் இந்த மாதம் ஏற்றதாக உள்ளது.
- மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள். படிப்பில் கவனம் தேவை.
- இந்த மாதம் பெரிய அளவிலான ஆரோக்கிய பாதிப்புகள் ஏதும் இருக்காது. உங்கள் உடல் வலிமை கூடும். நோய் வந்தாலும் எளிதில் குணமாகும்.  என்றாலும் உங்கள் உணவில் கவனம் தேவை.